பக்கங்கள்: பதின்நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 பங்குனி 13 வியாழக்கிழமை (26.03.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:120

# 2 நாள்களாகக் கடுஞ்சமர்; தொடர்ச்சியாக நடக்கிறது

## கனரக ஆயுதங்கள் கொண்டு புலிகள் தாக்குதல்

கொழும்பு, மார்ச் 26

புதன், வியாழக்கிழமை ஆகிய இரண்டு நாள்களிலும் முல்லைத்தீவுக் கள முனைகளில் இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் தொடர்ந்து கடும்சமர் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று புதன்கிழமை அதிகாலை வரை கடுஞ்சமர் நீண்டநேரம் நடைபெற்றதாகவும் அதற்கு முதல்நாள் செவ்வாய்க்கிழமை 12 மணிநேரம் சண்டை தொடர்ச்சியாக இடம்பெற்றதாகவும் களமுனைத் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை விடுதலைப்புலிகள் கனரக ஆயுதங்களைத் தாராளமாகப் பயன்படுத்தி தாக்குதல்களை உத்வேகத்துடன் நடத்துவதாகவும் அதன்காரணமாக படையினர் பெரும் எண்ணிக்கையில் காயமுறுவதாகவும் கூறப்பட்டது. (14 ஆம் பக்கம் பார்க்க)

## சம்மாந்துறையில் இளைஞரின் சடலம் மீட்பு

கொழும்பு, மார்ச், 26

சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மல்கம்பிட்டி வீதி பள்ளத்துக்கட்டு எனும் இடத்தில் வைத்து சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட இந்தச் சடலம் இளைஞர் ஒருவருடையது என சம்மாந்துறைப் பொலிஸார் (14 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு வலயப் பகுதிகள் மீது அகோர ஷெல் தாக்குதல்; செயலக ஊழியர் இருவர் உட்பட 112 பேர் மரணம்; 210 பேர் காயம்

கொழும்பு, மார்ச் 26

முல்லைத்தீவில் மக்கள் பாதுகாப்பு வலயப் பகுதிகள் மீது நேற்று அதிகாலை முதல் அகோர ஷெல் தாக்குதலும் விமானத் தாக்குதலும் நடத்தப்பட்டன. இத்தாக்குதல்களில் 25 சிறுவர்கள் உட்பட 112 பேர் கொல்லப்பட்டனர்; 210 பேர் காயமடைந்தனர்.

இணையத்தளங்கள் இத்தகவல்களை வெளியிட்டுள்ளன. இணையத்தளங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

'மக்கள் பாதுகாப்பு வலய' பகுதிகளில் உள்ள மக்கள் வாழ்விடங்கள் எங்கும் நேற்று புதன்கிழமை அதிகாலை தொடக்கம் படையினர் அகோர எறிகணைத் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

இப்பகுதிகளை நோக்கி நேற்று மட்டும் 986 ஷெல்கள் மற்றும் பல் குழல் வெடி கணைகள் ஏவப்பட்டதாக தெரிவிக்கப் படுகிறது.

### மாத்தளன் பகுதி மீது தாக்குதல்

அத்துடன் மாத்தளன் பகுதியில் துப்பாக்கிச் சூடு மற்றும் ஆர்பிஜி உந்துகணைத் தாக்குதல்களும் நடத்தப்பட்டன. இதே பகுதியில் மாத்தளன் மருத்துவமனை உள்ளது. இந்த மருத்துவமனையே இப்பகுதியில் உள்ள ஒரே ஒரு தற்காலிக மருத்துவமனையாகும். (14 ஆம் பக்கம் பார்க்க)

## தற்காலிக மோதல் தவிர்ப்பு செய்ய ஆயர்கள் ஐவர் கூட்டாகக் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 26

முல்லைத்தீவில் பாதுகாப்பு வலயத்தில் சிக்கியுள்ளவர்களில் வெளியேற விரும்புபவர்கள் வெளியே செல்ல வசதியாகவும் -

அங்கு தங்க விரும்புபவர்களுக்கு மனிதாபிமான உதவிகள் சென்றடைய வசதியாகவும் -

தற்காலிக மோதல் தவிர்ப்பு ஒன்றுக்கு இணங்க வேண்டும்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## 'உதயன்' அலுவலகம் மீதான குண்டுத்தாக்குதல்; விசேட பொலிஸ்குழுக்கள் நேற்று விசாரணை

யாழ்ப்பாணம், மார்ச் 26

'உதயன்' அலுவலகம் மீது நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு நடத்தப்பட்ட 'கிரனேட்' தாக்குதல் தொடர்பாக விசேட பொலிஸ் குழு ஒன்று நேற்றுக் காலை சம்பவ இடத்தில் துருவித் துருவி விசாரணைகளை மேற்கொண்டது.

குண்டு வீழ்ந்து வெடித்த பகுதியில் பரிசோதனைகளை



நடத்திய பொலிஸ் குழு, குண்டு சிதறல்கள் சிலவற்றை மீட்டது. நேற்றுக் காலை சம்பவ இடத்துக்கு விஜயம் மேற்கொண்ட யாழ். உதவிப் பொலிஸ் (14 ஆம் பக்கம் பார்க்க)

## 'சுடர் ஒளி' ஆசிரியரின் கைது குறித்து உயர் நீதிமன்றில் உரிமை மீறல் மனு

கொழும்பு, மார்ச் 26

சுடர்ஒளி, உதயன் பத்திரிகைகளின் ஆசிரியர் ந.வித்தியாதரன் கைது செய்யப் பட்டமை தொடர்பில், - அவரின் சார்பாக - உயர் நீதிமன்றத்தில் நேற்று அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஆசிரியர் வித்தியாதரன் சார்பில் சட்டத்தரணி திருமதி ரி.கௌரிசங்கரி இந்த மனுவைத் தாக்கல் செய்தார். 'சுடர் ஒளி' பத்திரிகையில் வெளியான சில செய்திகள் தொடர்பாக கடந்த மாதம் 20ஆம் திகதி கொழும்பு குற்றவியல் பிரிவினரின் விசாரணைக்கு சமுகமளித்தமை - 26ஆம் திகதி கல்கிசையிலுள்ள மலர்ச்சாலை ஒன்றில், மரணச் சடங்கில் கலந்து கொண்டிருந்த வேளை பொலிஸ் மற்றும் சிவில் உடையில் (13 ஆம் பக்கம் பார்க்க)

☞ தரம் - 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கென
உதயன் தனியாக வழங்கும்
கல்விச் சுடர் இணைப்பிதழ் உள்ளே ☜

## ஜனாதிபதியின் அழைப்பை ஏற்றுச் சந்திப்பதா? இல்லையா? கூட்டமைப்பு எம்.பிக்கள் இன்று நண்பகலே முடிவு செய்வர்

கொழும்பு, மார்ச்26

ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ விடுத்துள்ள அழைப்பை ஏற்று அவரை இன்று சந்திப்பதா, இல்லையா? என்பது குறித்த இறுதி முடிவு இன்று நண்பகலுக்கு முன்னர் எடுக்கப்படும். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜா இத் தகவலை நேற்றிரவு தெரிவித்தார். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை இன்று வியாழக் கிழமை மாலை சந்திக்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அழைப்பு அனுப்பியது தெரிந்ததே.

இது தொடர்பாக ஆராய்வதற்காக கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நேற்றுப் பிற்பகல் 3 மணிக்கு நாடாளுமன்றக் (13 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழருக்கு அதிகாரச் சம உரிமை வழங்க இந்தியாவிடம் உறுதியளித்தாராம் மஹிந்த

### மன்மோகன்சிங் கருணாநிதிக்குக் கடிதம்



கொழும்பு, மார்ச் 26

''இலங்கையில் இதர மக்களுக்கு இணையாக தமிழ் மக்களுக்கு உரிமைகள் அளிக்கப்பட வேண்டும் என்றும், தமிழர் வசிக்கும் பகுதிகளில் சம உரிமை அளிக்கும் வகையில் அதிகாரங்களைப் பிரித்துக் கொடுக்கவேண்டும் என்றும் இலங்கை அரசை இந்தியா வலியுறுத்தி யிருக்கின்றது. இதனை இலங்கை அதிபரும் ஏற்றுக்கொண்டு தமிழர்களின் முழுத் திருப்திக்கு ஏற்ப அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்க உறுதி அளித்திருக்கிறார்.''

- இவ்வாறு பிரதமர் மன்மோகன்சிங் தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்திருக்கிறார். (13 ஆம் பக்கம் பார்க்க)



## பாதுகாப்புச் சபையில் இலங்கை விவகாரம்; உறுதி செய்யும் முயற்சியில் பிரிட்டன் தீவிரம்

### அந்நாட்டு அமைச்சர் நாடாளுமன்றில் தகவல்

கொழும்பு, மார்ச் 26

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் இலங்கை நிலைவரம் குறித்து முழுமை யான விளக்கமொன்று அளிக்கப்படுவதை உறுதிசெய்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக பிரிட்டன் தெரிவித்தது.

பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் கேள்வி யொன்றுக்குப் (13 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கஜேந்திரன் எம்.பியின் சகோதரரை கொழும்பில் காணவில்லை என முறையீடு

கொழும்பு, மார்ச் 26

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரனின் சகோதரரான செல்வராஜா ரவீந்திரன் கொழும்பில் காணாமல் போயுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக மிரிஹான பொலிஸ் நிலையத்தில் கடத்தல் மற்றும் காணாமல் போதல் தொடர்பான விசாரணைகளை மேற்பார்வை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவிடமும், பிரதி அமைச்சர் பெ.இராதாகிருஷ்ணனிடமும் முறையிடப்பட்டுள்ளது.

தமது சகோதரரின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான விடுதியில் ரவீந்திரன் தங்கியிருந்தார்.

வழக்கமாக மொரட்டுவ பல்கலைக்கழகத்துக்கு மோட்டார் சைக்கிளில் சென்று வரும் அவர் - நேற்று முன்தினம் பல்கலைக் கழகத்துக்குச் சென்ற பின்னர் வீடுதிரும்பவில்லை என்று உறவினர்கள் தெரிவித்தனர். ரவீந்திரனின் மோட்டார் சைக்கிள் நேற்றுக்காலை மாதிவெல விடுதிக்கு அருகில் இருந்து மீட்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக ரவீந்திரனின் மனைவியும், தற்போது வெளிநாட்டில் தங்கியிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனும் பிரதி அமைச்சர் இராதாகிருஷ்ணனுடன் தொடர்பு கொண்டு விவரங்களைத் தெரிவித்திருக்கின்றனர். ரவீந்திரன் கடத்தப்பட்டாரா அல்லது கைது செய்யப்பட்டாரா என்பது தெரியவில்லை என்று அவர்கள் கூறினர்.

இது குறித்து பிரதி அமைச்சர் இராதாகிருஷ்ணன் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவுடன் தொடர்பு கொண்டு தெரியப்படுத்தியதையடுத்து பொலிஸ் மா அதிபரை உடன்டியாகத் தம்மை வந்து சந்திக்குமாறு பிரதமர் பணித்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(அ-சி)

## நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ளோருக்கு உதவி

யாழ்ப்பாணம்,மார்ச் 26

சர்வதேச லயன்ஸ் கழக 306பி1 இன் யாழ். மாவட்ட லயன்ஸ் கழகத்தினரால் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ளவர்களுக்கு வழங்கவென 2 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை தென்மராட்சிப் பிரதேச செயலாளரிடம் இன்று வழங்கவுள்ளனர்.

(203-204)

நினைவூட்டல்:-

**'சைவ வித்தியா'**

மலருக்கு ஆக்கங்கள் கிடைக்கவேண்டிய
கடைசி நாள்: 31.03.2009

சைவசமயம், தமிழ்மொழி, இலக்கியம், கல்வி, கலை, சமூகம், உடனலம், உளநலம் சார்ந்த ஆக்கங்களை அறிஞர்களிடமிருந்து எதிர்பார்க்கிறோம்.

கலாசாலை வீதி, திருநெல்வேலி.
செயலாளர்
சைவ வித்தியா விருத்திச் சங்கம்.

## விண்ணக வாழ்வின் 31 ஆம் நாள் நீங்கா நினைவலைகள்

### திருமதி மரியமலர் பத்திநாதர்

(தவமணி)



அன்னை மடியில் 14.09.1956 | ஆண்டவன் மடியில் 24.02.2009

இவ்வுலகிற்கேமை ஈந்து இறையன்பைக் காட்டிநின்றீர்,
இறைவனுக்கும் அயலவர்க்கும் இனிய
பணிக்கேமை ஊக்கினீர்,
பிறர்துன்பம் கண்டறிந்து உதவி பல செய்திடுவீர்,
பணியாவும் முடிந்ததென்று பரமனடி ஏகிவிட்டீர்.
முடிவில்லா வாழ்வு பெற இறையருள் வேண்டுகிறோம்.

இல.26, சென்.பற்றிக்ஸ் வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### இரத்தினம் குருநாதன்



கொக்குவில் மேற்கு, ஐயனார் கோயிலடியை வசிப்பிடமாகக் கொண்ட இரத்தினம் குருநாதன் 24.03.2009 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் சுப்புலட்சுமியின் அன்புக் கணவரும் குலசேகரன்(Germany), ஜெகதீஸ்வரன்(Norway), நந்தினி(London), சுதர்மன் (London), ரோகினி(Jaffna) ஆகியோரின் அன்புத் தந்தையும். செல்வராணி (Germany), தமயந்தி (Norway), பத்மநாதன்(London), குசலகுமாரி (London), தர்மசீலன் (Jaffna) ஆகியோரின் மாமனாரும், வாணுவி, றெஜினா, விஜய், பரதன், லக்ஸ்மன், பபீசன், நர்மதா, தேனுகா, லக்மி, லக்சிகா, சங்கர் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற துரைசிங்கம், காலஞ்சென்ற சிவராசா, நாகராசா, பரமேஸ்வரி, அன்னலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (24.03.2009) செவ்வாய்க்கிழமை 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியை கோம்பயன் மணல் மயானத்தில் இடம்பெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கு.சுதர்மன் (London)
கு.நந்தினி.

## வன்னி மக்களுக்கு உதவ உண்டியல் மூலம் நிதிசேகரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 26

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கென நாயன்மார்கட்டு அரசடிப்பிள்ளையார் கோயில் வருடாந்தப் பெருந்திருவிழாவின் போது அடியார்களிடம் இருந்து உண்டியல் மூலம் ஒரு தொகைப்பணம் சேகரிக்கப்பட்டது.

இந்தப் பணம் இரதோற்சவதின மாகிய இன்று மு.ப. 11 மணியளவில் இந்து அமைப்புக்களின் ஒன்றியத்திடம் கையளிக்கப்படவுள்ளது என கோயில் நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

## சிறுப்பிட்டியில் நாளை உபதபாலகத் திறப்பு விழா

யாழ்ப்பாணம்,மார்ச் 26

சிறுப்பிட்டி உபதபால் நிலையத் திறப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கிராம உத்தியோகத்தர் க.ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் இடம்பெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக வட பிராந்திய பிரதித் தபால் மா அதிபர் வி.குமரகுரு கலந்து கொள்வார். இந்த உபதபால் நிலையம் சிறுப்பிட்டி ஸ்ரீமனோன்மணி அம்பாள் ஆலய பரிபாலன சபையினரின் முயற்சியினால் அமைக்கப்பட்டுள்ளது.

(201)

## ஞானச்சுடர் சஞ்சிகை வெளியீடு நாளை

வடமராட்சி,மார்ச் 26

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான ஞானச்சுடர் ஆன்மீகச் சஞ்சிகையின் பங்குனி மாத இதழ் வெளியீட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பேரவை தலைவர் கே.அருள்லிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வெளியிட்டுரையை தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய அதிபர் வ.கணேசமூர்த்தியும், மதிப்பீட்டுரையை யாழ். கனகரத்தினம் மகா வித்தியாலய ஆசிரியர் கவிஞர் காரை எம்.பி.அருளானந்தனும் நிகழ்த்துவர்.

(1-236)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ். மக்கள் வசந்த எழுச்சிப் பேரவையின் ஆதரவுடன் யாழ். மாவட்ட ஹொக்கிச் சங்கம் நடத்தும் சுற்றுப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பி.ப 3 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

நாளை இடம்பெறும் ஆட்டங்களில் மோதும் அணிகளின் விவரம் வருமாறு:-

* பி.ப 3 மணிக்கு-வடமராட்சி ஹொக்கி வி.க. எதிர் உடற்கல்வி வி.க.
* பி.ப 3.45 மணிக்கு- கோப்பாய் வி.க. எதிர் சென்றலைட்ஸ் வி.க.

(1)

* * *

யாழ்ப்பாணம்,மார்ச்26

இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் 17,15 வயது பிரிவினருக்கு நடத்தப்படவுள்ள சுற்றுப் போட்டிக்கான அணிநிரல் ஒழுங்கு தொடர்பான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பத்திரிசியார் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

போட்டியில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் பொறுப்பாளர்களை சமுகமளிக்குமாறு போட்டி இணைப்பாளர் கேட்டுள்ளார்.

(1)

**அருள் முருகன் திருமணப் பணியகம்**

உள்நாடு/வெளிநாடுகளிலுள்ள வைத்தியர்கள், பொறியியலாளர்கள் உட்பட எத்தகைய மணமகன்/மணமகளை எதிர்பார்ப்பினும் பணியகம் மனப்பூர்வமாக ஒத்துழைப்பு வழங்கும்! 03, யாழ்.வீதி, சிறாம்பியடி லேன் (ஆரியகுளம் வாசிகசாலை லேன்), யாழ்ப்பாணம். T.P. 222 9334

**கோழிக்குஞ்சுகள் விநியோகம்**

Bahira புறொயிலர் குஞ்சுகள்
எதிர்வரும் 28.03.2009
விநியோகிக்கப்படும். பதிவுகளை
மேற்கொள்ளவும்.

★ றாஜீவ் - நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
★ சிற்றிபாம் றேடர்ஸ் - கல்வியங்காடு.
★ திருமகள் களஞ்சியம் - சிவலிங்கப்புளியடி.
★ கோல்டன் பாம் - பருத்தித்துறை.
★ [illegible]
★ [illegible]

## மரண அறிவித்தல்கள்

### கந்தப்பர் செல்லையா



அல்வாயைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் வடக்கு, நாவற்கட்டை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தப்பர் செல்லையா நேற்று (25.03.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தப்பர் வள்ளிப்பிளளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, வல்லிபுரம் சதாசிவம், சுப்பிரமணியம், நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சின்னம்மா(ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும், சௌதாம்பிகையின் அன்பு மாமனாரும் சுகந்தினி, ஜெகதீவன், ரவிச்சந்திரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.03.2009) வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக ளுக் காக கோப்பாய் கந்தன் காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாவற்கட்டை,
கோப்பாய் வடக்கு.

தகவல்:
சி.சௌதாம்பிகை (மருமகள்).

### வேலுப்பிள்ளை இராசரத்தினம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/வல்வை சிவகுரு வித்தியசாலை, வல்வெட்டித்துறை)



15ஆம் கட்டையடி, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை இராசரத்தினம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) நேற்று (25.03.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சீதேவன் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புத் துணைவரும் காலஞ்சென்ற இரத்தினசிங்கம் (ஓய்வுபெற்ற பிரதம லிகிதர்) அவர்களின் அன்புச் சகோதரரும் தயாழினி (கனடா), இன்பநிதி, கமலநாதன் (கனடா), கேதீஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் கதிர்காமநாதன் (கனடா), சித்திரவேல் (சிரேஸ்ட தொழில் நுட்ப அதிகாரி, R.D.A, பருத்தித்துறை), ரோகினி (கனடா), அனுசியா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் செல்வன், கவிதா, கோகிதா, கேமலதா, தர்மதா, சஞ்ஜெய், சர்மிலன், ரோஹணா, நிரோஷன், பானுசன், அனுஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.03.2009) வியாழக்கிழமை பி.ப. 2மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரம்பாவளி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

15ஆம் கட்டையடி,
உடுப்பிட்டி

தகவல்:
திரு தி.சித்திரவேல். (மருமகன்)

### திருமதி அன்னம்மா செல்லையா



கோண்டாவில் கிழக்கு, M.S வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா செல்லையா நேற்று (25.03.2009) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தர் - நாகாத்தை தம்பதியினரின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான சிதம்பரி - சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, இராசம்மா, சின்னாச்சி மற்றும் தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் சின்னத்துரை, சபாரட்ணம், சொர்ணம்மா (சிலாபம்), பூபதி, இரத்தினம்மா, செல்வரட்ணம், சிவகுமார் (லெ்பனான்) ஆகியோரின் அன்புத் தாயாரும் நேசரட்ணம், காலஞ்சென்றவர்களான ஜெயவதி, கந்தையா, கந்தசாமி மற்றும் இராமேஸ்வரம், மேரிறஞ்சிதம், அருணா ஆகியோரின் அன்பு மாமியாரும் பாலச்சந்திரன், பாலகுமார் (சுவிஸ்), பாலகிருஷ்ணா (கொழும்பு), சுமதி (லண்டன்), ஜேந்தி (ஜேர்மன்), சிவபாக்கியம் (சுவிஸ்), வளர்மதி (பண்டாரவளை), கலைச்செல்வன் (சிலாபம்), கவிதா (பிரான்ஸ்), லோகதாஸ், ராமதாஸ் (டோகா), நிஷானி, பாஸ்கர் (பிரான்ஸ்), கோமதி (பிரான்ஸ்), சிந்துஜா, கல்பனா (சுவிஸ்), கஸ்தூரி (லண்டன்), உசாந்தி, கனிஷ்டன், விஸ்ணுகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் திலக்ஷனா, லோகிதா, வேணுகாந்த், ஜனுஷியா துசாந், ரம்யா (லண்டன்), சஹானா (லண்டன்), சாதனா (லண்டன்), நிரூஜா (சுவிஸ்), கீர்த்தனா (சுவிஸ்), விநோத் (சுவிஸ்) கீர்த்திகா (பண்டாரவளை), ஜஸ்மிதா (பண்டாரவளை), தர்மிகா (சிலாபம்), பிருந்தன் (சிலாபம்), கவினாஷ் (பிரான்ஸ்), ஸேனுஷா, ஸேனுஜா, மயூரிகா, தன்னியா (பிரான்ஸ்), திவ்வியா (பிரான்ஸ்), சர்ணியா (பிரான்ஸ்), ஆகாஷ் (சுவிஸ்), அபினேஸ் (சுவிஸ்),தஸ்வின் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.03.2009) வியாழக்கிழமை ந.ப. 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக் கோண்டாவில் கிழக்கு ஆலடி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

எம்.எஸ். வீதி,
கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# மனிதப் பேரவலம் குறித்து நியாய சிந்தனை பிறக்கட்டும்

ஐக்கிய நாடுகள் சபையில் சீனாவும் ரஷ்யாவும் இருக்கும் வரை, இலங்கைக்கு எதிராக எந்தவிதமான பிரேரணையையும் பாதுகாப்புச் சபையில் கொண்டுவரமுடியாது.

இவ்வாறு, உறுதிபடவும் தீர்க்கமாகவும் கூறியிருக்கிறார் அமைச்சர் டிலான் பெரேரா. அமைச்சர் டிலான், நியாயமாகவும் நீதியாகவும் கருத்துக் கூறுபவர் என்று கணிக்கப்படுபவர். தமக்குச் சரியெனக் கருதுவதை மறைக்காமலும் துணிச்சலுடனும் வெளியிடுபவர் என்று கருதப்படுபவர்.

தமிழர்களது உரிமைகளை வழங்கவேண்டும். தமிழர்களை இந்த நாட்டின் பிரசைகளாகக் கணக்கில் கொண்டு, பொருட்படுத்தி அவர்களது உரிமைகளை, அபிலாசைகளை நிறைவேற்றவேண்டும் என்று உரத்து ஒலித்தவர். ஆனால், இப்போது அவர் அந்த மதிப்புக்குரிய இடத்தில் இருந்து இறங்கி, ஏனைய பெரும்பான்மையின அரசியல்வாதிகள் போல மாறிவிட்டாரோ என்று எண்ணுமளவுக்கு மேலே கூறிய கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

தமிழ்மக்களை இந்நாட்டின் சொந்த மக்களுக்குரிய இடத்தில் வைத்துப் பார்த்து - கணித்து - அதற்குரிய வகையில் - அவர்களை பேணும் விதத்தில் - செயற்பட்டால் இலங்கை விவகாரம் - வன்னியின் மனிதப் பேரவலம்-ஐ.நா.பாதுகாப்புச் சபையில் அரங்கேற இடமில்லை. இராணுவ அட்டவணைக்கு உட்படுத்தப்பட்ட நலனுக்கு அன்றி, மக்கள் நல னுக்கும் மனிதாபிமானத்துக்கும் முதன்மை இட மளித்து அரசு செயற்படுமானால், இந்த விவகாரம் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபை மட்டத் துக்குச் செல்லவேண்டும் என்று எவரும் விரும்ப மாட்டார்கள். அது தேவை அற்றதாகிவிடும்.

இலங்கையில் மோதல்கள் தொடர்வதன் காரணமாக, அதிகமான பொதுமக்கள் உயிரிழக்கின்றனர் என்பதனை அறிந்துகொண்டே பல சர்வதேச அமைப்புக்கள் இது விடயத்தை பாதுகாப்புச் சபைக்கு எடுத்துச்சென்று தடுக்கவேண்டும் என்று விரும்புகின்றன; கருத்துக் கூறுகின்றன.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் கவுன்சில் முதற்கொண்டு ஏனைய சர்வதேச மனித நேய அமைப்புகள், மனிதப் பேரவலம் நிறுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் பாதுகாப்புச் சபையிடம் உண்டு என்பதனாலேயே அதனை நாடுகின்றன.

மக்கள் பாதுகாப்பாக வெளியேற வசதி செய்து கொடுப்பதாக, அரசாங்கம் வெளிவார்த்தைக்குக் கூறிக்கொள்கிறது. ஆனால், அதற்கு உகந்த பின்புலத்தை உருவாக்கும் பணியில் இதயசுத்தியுடன் அரசு செயற்படுவதாக சர்வதேச அமைப்புகள் இன்னும் கணிக்கவில்லை. அதனாலேயே, நடுவுநிலைமையை அனுசரிக்கும், மனித உரிமையில் நாட்டமுள்ள, அப்பாவி உயிர்கள் அழிக்கப்படக்கூடாது என்பதில் அக்கறையுள்ள அமைப்புகள் வன்னி மனிதப் பேரவலத்தை வெறும் வீம்புக்காக கையில் ஏந்திப் பிடிக்கமாட்டா.

அத்தகைய ஏது நிலையை உருவாக்கக்கூடாது என்பதில் இலங்கை அரசும் அமைச்சர்களும் நேர்மையான ஈடுபாடும் அக்கறையும் கொண்டு செயற்பட்டால், ஐ.நா.பாதுகாப்புச் சபையை நாடவேண்டும்; அங்குதான் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் - மனிதப் பேரவலத்துக்கு முடிவு கட்டமுடியும் - என்ற தேவையும் இருக்காது; அதற்கென ஓர் ஆசையும் பிறக்காது.

வன்னியின் மனித அவல விவகாரம் பாதுகாப்புச் சபைக்குச் சென்றாலும், அங்கு அரச பக்கத்துக்கு ஆதரவு வழங்குவதற்கு அங்கத்தவர்கள் இருக்கிறார்கள். எங்களை எவரும் எதுவும் எதுவும் செய்துவிட முடியாது என்று கூறுவதைத் தவிர்த்துக்கொண்டு -

அவர்கள் பொய்சொல்கிறார்கள் அல்லது பெருப்பித்துக் காட்டுகிறார்கள் என்று குற்றச்சாட்டுக்களை அடுக்காது -

அர்த்தபுஷ்டியுள்ள, நடைமுறைச் சாத்தியமான, ஆக்கபூர்வமான வழி ஒன்றைக் கைக்கொண்டு மனிதப் பேரவலத்தை நிறுத்துவதற்கு அரசு முன்வந்தால், தமிழ்மக்களும் நன்றி சொல்வார்கள்; சர்வதேச அமைப்புக்களும் பாராட்டும்.

டிலான் பெரேரா போன்ற நியாய சிந்தனையாளர்கள், அரசாங்கத்தை அந்த வழியில் இட்டுச் செல்வார்களாயின், அது இலங்கைக்கு நன்மதிப்பைத் தேடிக்கொடுக்கும். மனிதப் பேரவலம் குறித்த எல்லாப் பிசிறுகளும், பிணிகளும் விட்டு நீங்கும்.

இது குறித்து உள்ளார்ந்த கவனம் எடுக்கப்படின், அது எல்லோருக்கும் நல்லதாகும். ஒரு கணம் சிந்திக்கலாமே..!

# இடம்பெயர்ந்த மக்களுக்காக மேற்கொள்ளப்படும் பணிகளால் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை மைதானம் சேதமுறுமென அச்சம்

## கலாசாலைச் சமூகம் கவலை

யாழ்ப்பாணம், மார்ச் 26

விடுவிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து அழைத்து வரப்பட்டு, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கான தேவைகளின் பொருட்டு மேற்கொள்ளப்படும் சில நடவடிக்கைகளால் தமது கலாசாலையின் வளங்கள் பாதிக்கப்படுவதாகக் கலாசாலைச் சமூகத்தினர் கவலை வெளியிட்டுள்ளனர்.

ஆசிரிய கலாசாலையில் தங்கியுள்ள மக்களுக்கான மருத்துவ நிலையம் ஒன்றை அமைப்பதற்கான கட்டடப் பொருள்கள் ஆசிரியர் கலாசாலையின் பிரதான விளையாட்டு மைதானம், கரப்பந்தாட்ட மைதானம் என்பவற்றில் பரவி விடப்பட்டுள்ளன. இத்தகைய செயல்களால் இப்போது மட்டுமல்லாது எதிர்காலத்திலும் ஆசிரியர் கலாசாலை மாணவர்களின் உபயோகத்திற்கு உதவாத தன்மை கொண்டவையாக விளையாட்டு மைதானங்கள் மாறிவிடுமெனவும் கல்வியின் மிக முக்கியமான அம்சமான விளையாட்டின் எதிர்காலம் கேள்விக்குறியாகி விடுமெனவும் ஆசிரியர் கலாசாலைச் சமூகத்தினர் அச்சம் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகள் மேற்கொள்ளப்படுவதை நாம் வரவேற்கின்றோம். அதற்கு உரிய வழிகள் உள்ள போதும் அவற்றைக் கவனத்தில் எடுக்காது ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் வளங்கள் தேவையற்று விரயமாக்கப்படுவதை தவிர்க்க வேண்டுமென எதிர்பார்க்கின்றோம். ஏற்கனவே மாணவர் விடுதி, அரச வசிப்பிடம், சில வகுப்பறைகள் என்பனவற்றை இங்கு தங்கியுள்ள மக்களின் பயன்பாட்டுக்கென நாம் கொடுத்து உதவி இருக்கின்றோம். இந்த நிலையில் எம்மிடம் உள்ள ஒரேயொரு விளையாட்டு மைதானத்தை தேவையற்றுச் சிதைப்பதால் விளையாட்டுத்துறையில் ஆசிரியர்களின் எதிர்காலம் பற்றி நாம் கவலை கொள்ள நேரிடுகிறது என்றும் ஆசிரியர் கலாசாலைச் சமூகத்தினர் உதயனிடம் பெரும் கவலை தெரிவித்தனர். (04.50)

# ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் வவுனியா அகதி முகாங்களுக்கு விஜயம்

கொழும்பு, மார்ச் 26

ஒன்றியத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று நேற்று முன்தினம் வவுனியாவில் உள்ள அகதி முகாங்களுக்கு விஜயம் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா இடைத்தங்கல் முகாங்களில் தங்கியிருக்கும் இடம்பெயர் மக்களையும் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள உதவிகயையும் குறித்த குழுவினர் நேரில் பார்வை யிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஐரோப்பிய ஒன்றிய உறுப்பினர்கள் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பி.எஸ்.எம்.சார்ள்ஸை சந்தித்து இடம்பெயர் மக்களது நிலைமை குறித்து கலந்துரையாடியதாகவும் கூறப்படுகின்றது. செஞ்சிலுவைச் சர்வதேச மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பு ஆகியவற்றின் ஊடாக ஐரோப்பிய ஒன்றியம் இடம்பெயர் மக்களுக்கு உதவிகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தகது. (50)

# தமிழர் பாதுகாப்புக் குழுவில் உள்ளோர் இலங்கை மீது படையெடுப்பு நடத்தட்டும்

## இங்கே யார் குறுக்கே நிற்கிறார்கள்? கிண்டலடிக்கிறார் கருணாநிதி



சென்னை, மார்ச் 26

இலங்கைத் தமிழர்கள் பாதுகாப்புக் குழுவில் இருக்கின்றவர்கள், இலங்கை நோக்கி இராணுவ அணிவகுப்பு நடத்தட்டுமே! அந்த நாட்டின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை முறியடித்துத் திரும்பட்டுமே! இங்கே யார் குறுக்கே நிற்கிறார்கள்? இறையாண்மையைக் காட்டி, இலங்கைத் தமிழர்களின் வேதனைகளை மறுக்கவோ, மறைக்கவோ, அலட்சியப் படுத்தவோ நானும், தமிழக அரசும் என்றைக்கும் எண்ணியதில்லை.

- இவ்வாறு பா.ம.க. நிறுவுநர் ராமதாஸுக்கு முதல்வர் கருணாநிதி பதிலறிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து நேற்றுமுன்தினம் அவர் வெளியிட்ட அறிக்கையின் விவரம் வருமாறு -

இறையாண்மையைக் காட்டி, இலங்கைத் தமிழர்களின் வேதனைகளை மறுக்கவோ, மறைக்கவோ, அலட்சியப்படுத்தவோ நானும், தமிழக அரசும் என்றைக்கும் எண்ணியதில்லை.

இலங்கைத் தமிழர் பாதுகாப்பு அணியில் உள்ளவர்கள் இப்போது சமீப காலமாக, இலங்கையில் உள்ள முல்லைத் தீவு பற்றியோ, வவுனியா பற்றியோ, கிளிநொச்சி குறித்தோ பேசுவதில்லை.

அவர்களுடைய பிரச்சினை எல்லாம், திருநெல்வேலி யாருக்கு? திருச்சி யாருக்கு? சிதம்பரம் யாருக்கு? ஆரணியா? திருவண்ணாமலையா? அல்லது இரண்டுமா? மாநிலங்களவைத் தொகுதியும் சேர்த்தா? சேர்க்காமலா? இவை பற்றித்தான் அல்லும் பகலும் ஆராய்ச்சி செய்து அவைகளைப் பெறவும், தரவும் அலையாய் அலைந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்த அலையில் நம்மை (தி.மு.க.) பார்த்து, இலங்கைத் தமிழர் பிரச்சினையைக் கைகழுவி விட்டோம் என்கிறார்கள்.

அவர்கள் (ராமதாஸ்) வாதப்படி, நாம் கைகழுவி விட்டவர்கள் அல்லது கையாலாகாதவர்கள் என வைத்துக் கொண்டால், இவர்கள் இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்றும் நிலையில் உள்ளவர்கள் ஆயிற்றே?

இலங்கைத் தமிழர்கள் பாதுகாப்புக் குழுவில் இருக்கின்றவர்கள், இலங்கை நோக்கி இராணுவ அணிவகுப்பு நடத்தட்டுமே! அந்த நாட்டின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை முறியடித்துத் திரும்பட்டுமே! இங்கே யார் குறுக்கே நிற்கிறார்கள்?

ஒரு நாள் பகல் இரவு 24 மணி நேரத்தில் - 20 மணி நேரம் தொகுதிப் பங்கீடு - மாநிலங்களவை உறுப்பினர் பதவி இப்படி பேரம் பேசிக் கொண்டிருப்பவர்களுக்கு இலங்கைத் தமிழர் பிரச்சினை என்றாலே ஒரு வீரம் பொசுக்கென வந்து விடுகிறது.

உடனே, பூகம்பமாக வெடித்து, புயலாகச் சீறி, மத்திய ஆட்சியில் இருக்கும் காங்கிரஸ் மீதும் கனல் கக்குகிறார்கள்; தமிழகத்தில் இருக்கும் தி.மு.க. ஆட்சி மீதும் தணல் கொட்டுகிறார்கள்.

வேண்டாம் இந்த வம்பு. நாளைக்கே தோணிகளை தயார் செய்யட்டும். அவை கள்ளத் தோணிகளாக இருந்தாலும் பரவாயில்லை. அவற்றில் படைகளை ஏற்றிச் செல்லட்டும்.

கோழைகளாகிய நாங்கள் கண்கொட்டாமல் அவற்றைப் பார்த்துக் களிக்கிறோம். கை தட்டி ஜெய கோஷம் போடுகிறோம்.

இலங்கை மீது படையெடுப்புக்குத் தலைவியாக ஜெயலலிதாவையும் ஏற்றுக் கொண்டு, அவரையும் அழைத்துச் செல்லுங்கள். அவர் நிச்சயமாக மஹிந்த ராஜபக்ஷவைப் போரிலேவென்று அவரைக்கைது செய்து இந்தியாவுக்கு அழைத்து வருவார்.

இலங்கைப் பிரச்சினையில் இந்தியா தலையிட முடியாது - அது ஒரு அயல்நாட்டுப் பிரச்சினை என்று அ.தி.மு.க. ஆட்சியில் சட்டப் பேரவையில் அன்றைய முதல்வர் ஜெயலலிதா பேசியதை ராமதாஸ் வசதியாக மறந்து விடலாமா?

மேடையேறிப் பேசுகிறவர்களை எல்லாம், இறையாண்மையை மீறுகிறார் என்று காரணம் காட்டி தமிழகத்தில் யாரும் கைது செய்யப்படவில்லை. சொல்லப்பட்ட காரணங்களில் இறையாண்மைக்கு விரோதம் என்பதும் ஒன்றாக இருக்கலாம் - என்றுள்ளது.

### நாளை

| | |
|---|---|
| பங்குனி 14 | 27.03.2009<br>வெள்ளிக்கிழமை |
| திதி: | பிரதமை<br>மு.இ. 09.27வரை |
| நட்சத்திரம்: | ரேவதி<br>பி.இ.06.06 வரை |
| சுபநேரம்: | 06.14 - 07.44 |
| ராகுகாலம்: | 10.44 - 12.14 |

# அ.தி.மு.க. கூட்டணியில் சேர்வது ஈழத் தமிழர்களுக்கு எதிரானது!

## கருணாநிதியை சந்தித்த பின் திருமா பேட்டி



சென்னை, மார்ச் 26

இலங்கையில் வாழும் தமிழ் இனத்திற்கு எதிராகப் பேசியவர் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா. எனவே, அ.தி.மு.க. கூட்டணியில் சேருவது ஈழத் தமிழர்களுக்கு எதிரானது - என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் கூறியுள்ளார்.

முதல்வர் கருணாநிதியை, சென்னை கோபாலபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில், தொல்.திருமாவளவன் நேற்று முன்தினம் மாலை சந்தித்துப் பேசினார். சுமார் ஒன்றரை மணி நேரம் நடந்த இந்தச் சந்திப்பின்போது, இரு வரும் தொகுதிப்பங்கீடு குறித்து பேசினர்.

இச்சந்திப்பின் பின்னர், செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அப்போது அவர் கூறியதாவது -

இலங்கையில் வாழும் தமிழ் இனத்திற்கு எதிராகப் பேசியவர் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா. விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனை கைது செய்ய வேண்டும், விடுதலைப்புலிகள் சரண் அடைய வேண்டும் என்று தமிழ் ஈழத்திற்கும், தமிழ் இனத்திற்கும் எதிராகப் பேசியவர். ஆனால், இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவு காட்டுவது போல, உண்ணாவிரதம் என்ற ஒருநாள் கூத்தை ஜெயலலிதா நடத்தினார். அ.தி.மு.க., தி.மு.கவுடன் ஒப்பிட முடியாத கட்சி. ஈழத் தமிழர்கள் விவகாரத்தில் அ.தி.மு.க. நேர் எதிரான கட்சி.

தி.மு.க. கூட்டணிக்கு பா.ம.க. வருவார்கள் என்ற நம்பிக்கை இன்னும் எனக்கு உள்ளது. எங்களை அ.தி.மு.க. கூட்டணிக்கு வருமாறு டாக்டர் ராமதாஸ் அழைக்கவில்லை. பா.ம.க.வுடன் வர சூசகமாக அவர் அழைத்தார். நாங்கள் தற்போது தி.மு.க.வுடன் தொகுதிப்பங்கீடு குறித்து பேசி வருகிறோம். அணிமாறுவது குறித்து எந்த ஊசலாட்டமும் எம்மிடம் இல்லை.

சிதம்பரம் தொகுதியில் பா.ம.கவும், விடுதலைச் சிறுத்தைகளும் தனித்தனி அணியில் நின்று போட்டியிட நேரிட்டால், எங்களுக்குள் போட்டிதான் இருக்குமே தவிர, மோதல் இருக்காது - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் வான்குண்டு வீச்சு, ஷெல் தாக்குதல்!
# கைக்குழந்தைகள், சிறுவர்கள் உட்பட 101 பேர் பலி!!

கொழும்பு, மார்ச்26

வன்னியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்ட வான் குண்டு மற்றும் ஷெல் தாக்குதல்களில் 101 பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 125க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர் என இணைத் தளங்கள் தெரிவித்துள்ளன. அந்த இணைத் தளங்கள் தெரிவித்துள்ளமை வருமாறு;

மக்கள் பாதுகாப்பு வலய பகுதிகளான மாத்தளன், வலைஞர் மடம், முள்ளி வாய்க்கால், அம்பலன்பொக்கணை ஆகிய பகுதிகளில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை படையினர் அகோர ஆட்லறி ஷெல், பல்குழல் வெடிகணை, மோட்டார் மற்றும் பீரங்கித் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

குறிப்பாக மாத்தளன் பகுதியில் அதிகளவில் ஷெல், துப்பாக்கிச் சூடு மற்றும் ஆர்பிஜி உந்துகணைத் தாக்குதல் என்பனவற்றையும் படையினர் செறிவாக நடத்தினர். இதில் 25 பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். அம்பலவன் பொக்கணையில் 18 பொதுமக்களும் வலைஞர்மடத்தில் 11 பொதுமக்களும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இதேவேளையில் வலைஞர் மடத்தில் தொலைதூர துப்பாக்கிச் சூட்டுரவை தாக்கி யதில் பொதுமகன் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

முள்ளிவாய்க்காலில் 4 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். முள்ளிவாய்க்கால், அம்பலவன் பொக்கணையில் உள்ள பச்சைப்புல்மோட்டைப் பகுதிகளில் நேற்றுமுன்தினம் 15 தடவைகள் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் கைக்குழந்தைகளும் சிறுவர்களுமாக 17 பேர் உட்பட 41 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலைக்கு நேற்று முன்தினம் கொண்டு வரப்பட்ட சடலங்களில் அடையாளம் காணப்பட்டவற்றின் விவரம்:

ம.தேனுஜா (வயது 03), நீ.சுவர்ணா (வயது 13), சு.சந்திரகலா (வயது 17), செ.புவித்ரா (வயது 13), ப.குகராஜ் (வயது 12), செ.வித்ரா (வயது 13), த.மதிஜினி (வயது 09 மாதங்கள்), [illegible] மதீபன் (வயது 07), கி.தமிழ்நிலவன் ([illegible]து 08), ஐ.சுதீபன் (வயது 7), சு.நீலவாணன் (வயது 13), ம.மதிவாணன் (வயது 7 மாதங்கள்), க.கதிர்ச்செல்வன் (வயது 10 மாதங்கள்), சி.சண்முகநாதன் (வயது 57), க.மேரி யூலியட் (வயது 49), கே.ரஜனிகாந்த் (வயது 29), ர.நிரஞ்சினி (வயது 28), த.மகேந்திரராசா (வயது 42), உதயசாந்தினி (வயது 27), வீ.வீரம்மா (வயது 60), சு.தவமணி ரீட்டா (வயது 45), சு.ஜனதீசன் (வயது 07), கி.கணேசநாயகம் (வயது 35), ஏ.நேசமணி (வயது 79), வே.மீனாட்சி (வயது 78), கி.விமலாதேவி (வயது 47), பி.மூக்கையா (வயது 67), மூ.தவச்செல்வி (வயது 16), ரா.புவனேஸ்வரி (வயது 45), ந.நேசமலர் (வயது 54), ச.கவிதா (வயது 22), இ.நேசமலர் (வயது 29), த.மகேந்திரராசா (வயது 43), சு.தர்மலட்சுமி (வயது 59), மா.செல்வநாயகம் (வயது 49), ஜே.கொன்சாலியேஸ் (வயது 42), கே.தர்மினி (வயது 35), கி.விமலேஸ்வரி (வயது 47), ம.சுப்பிரமணியம் (வயது 78), கி.பார்த்தீபன் (வயது 37), கி.நவரட்ணம் (வயது 48), வி.யேசுபாலன் (வயது 85), கே.மகாலட்சுமி (வயது 45) ஆகியோர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். ஏனையோரின் பெயர் விவரம் கிடைக்கப்பெறவில்லை.

இதேவேளையில் புதுமாத்தளன் வைத்தியசாலையும் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது. இதில் வைத்தியசாலைப் பணியாளர், தமிழர் புனர்வாழ்வு கழகத் தொண்டர், நோயாளி உட்பட 3 பேர் காயமடைந்தனர். வைத்தியசாலைச் சூழலில் 48 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

புதுமாத்தளன் வைத்தியசாலை வாசலுக்குள் ஆர்பிஜி உந்துகணைகள் வீழ்ந்து வெடித்துள்ளன. இதில் 25 பேர் காயமடைந்துள்ளனர். புதுமாத்தளன் வைத்தியசாலைக்கு முன்பாக நேற்று முன்தினம் பிற்பகல் 4.45 மணியளவில் ஷெல்கள் வீழ்ந்து வெடித்துள்ளன.

இதில் 15 பேர் காயமடைந்தனர். பின்னர் பிற்பகல் 5.30 மணிக்கும் ஷெல் வீழ்ந்து வெடித்துள்ளது.

இதில் சிறுவன் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 12 பேர் காயமடைந்துள்ளனர் என்றுள்ளது.

## மரண அறிவித்தல்

### அருளம்பலம் செல்வநாயகம்



கலட்டி அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கு ஆடியபாதம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட அருளம்பலம் செல்வநாயகம் நேற்று (25.03.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளம்பலம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லர் - சின்னத்தங்கச்சி தம்பதியரின் மருமகனும் பரமேஸ்வரியின் பாசமிகு கணவருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில். (83516) செ.இராசேந்திரம் (மைத்துனர்)

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 26 . 06 . 1938



மறைவு 25 . 02 . 2009

### அமரர் ஆறுமுகதாஸ் இராஜேஸ்வரி

இல்லறத்தை இனிதாக்கி
இதயங்களில் இடம்பிடித்து
இனிதே மறைந்த அன்னையே!
ஆராத்துயரில் அழுகிறது எம் இதயம் உனக்காக.

கடந்த 25.02.2009 புதன்கிழமை சிவபதமடைந்த ஆறுமுகதாஸ் இராஜேஸ்வரி அவர்களின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனை இன்று (26.03.2009) வியாழக்கிழமை முற்பகல் 9 மணி முதல் எமதில்லத்தில் நடை பெறவுள்ளது. ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம். அத்துடன் அன்னாரின் துக்க நிகழ்வில் பங்குகொண்ட அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யுனிக் வீடியோ, இணுவில் தெற்கு. தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### A.V.சூசைதாசன்

(Rtd. Technical Assistant, Agriculture Dept.)

யாழ்ப்பாணம் குருசோ வீதியைப் பிறப்பிடமாகவும், ஸ்ரான்லி வீதியை வசிப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட A.V. சூசைதாசன் 23.03.2009 திங்கட்கிழமை கொழும்பில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேதநாயகம் (அருணி) - பாக்கியம் தம்பதியரின் பாசமிகு மகனும் பிலிப் - மரியம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் யசிந்தா (வவா) வின் பாசமிகு கணவரும் அன்புமணி, புஸ்பராணி, றோஸ் மேரி (கிளி), கிறிஸ்ரி (தியாகு), அன்ரன் (சந்திரபோஸ்), சுசிலா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் அனித், கமிலஸ் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்), காலஞ்சென்ற கமலினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் புஷ்பராணி, காலஞ்சென்ற வெனிற்றா ஸ்ரனிஸ்லோஸ், ஜீவராசா, மரியதாசன், கலா, ஜெனி, சிவராசா ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற செல்வராசாவின் சகலனும் அகல்யாவின் மாமனும் அனிசாவின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (26.03.2009) வியாழக்கிழமை காலி வீதி, கல்கிசையில் அமைந்துள்ள மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பி.ப. 3 மணியளவில் நல்லடக்கத்திற்காக கல்கிசை சேமக் காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வெள்ளவத்தை, கொழும்பு.
தொ.பே. 071 4445993,
0114 336068 (83817)

தகவல்:
கமிலஸ் (மகன்)

## விவசாய, ஒருங்கிணைப்பு குழுக்கூட்டங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 26

தென்மராட்சிப் பிரதேச விவசாயக் குழு, பிரதேச ஒருங்கிணைப்புக் குழு ஆகியவற்றின் கூட்டங்கள் எதிர்வரும் 31ஆம் திகதி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

காலை 9.30 மணிக்கு விவசாயக் குழுக் கூட்டமும் முற்பகல் 11 மணிக்கு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் நடைபெறுமென பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (203-207)

## தவறிவிட்டது

வைரவர் கோயிலடி, பத்தமேனி, அச்சுவேலி என்னும் முகவரியைச் சேர்ந்த மயில்வாகனம் சற்குணேஸ்வரி என்பவரது தேசிய அ.அட்டை (725202660V) மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலய சூழலில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் வே.ஜெயகாந்தன், ஆலடி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் என்னும் முகவரியில் அல்லது விவசாய மருந்துக்கடை, கோண்டாவில் சந்தி என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தொ.பே.0777 475923.

## ஆள்கள் இல்லாத நேரம் வீட்டில் புகுந்து திருட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 26

பட்டப் பகல் வேளையில் ஆள்கள் வீட்டில் இல்லாத சமயம் அங்கு சென்ற திருடர்கள் 14 பவுண் தங்க நகைகள் மற்றும் பணம் ஆகியவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் கொழும்புத்துறை, விபுலானந்தர் வீதியில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(203-224)


## சேவைநலன் பாராட்டும் வரவேற்பு வாழ்த்தும்

பன்னாலை கிராம மேம்பாட்டிற்கும், எமது பன்னாலை கிராம அபிவிருத்தி அமைப்பிற்கும் அரும்பணியாற்றி இடமாற்றம் பெற்றுச் செல்லும் கிராம உத்தியோகத்தர்

திரு.சதாசிவம் சிவகுமார்

அவர்கள் ஆற்றிய சேவைக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து நீடூழி வாழ ஆண்டவன் ஆசியை வேண்டி நிற்பதுடன் தொடர்ந்து எமது கிராமத்திற்கு நற்பணியாற்ற வந்திருக்கும் கிராம உத்தியோகத்தர்

திருமதி மதிவதனன் மாலாதேவி

அவர்களை பன்னாலை கிராம மக்கள் சார்பாக வருக! வருக! என வரவேற்பதில் எமது அமைப்பு பெருமகிழ்ச்சி அடைகின்றது.

பன்னாலை கிராம அபிவிருத்தி அமைப்பு
மீள் எழுச்சித் திட்டம்

அனுசரணை: பொன்மலர் ஸ்ரோர்
அளவெட்டி வடக்கு, அளவெட்டி. தொ.பே. 060 221 2558, 060 221 3426

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

1074 நீலம்

வெற்றி இலக்கங்கள்

இடபம் 01 04 18 21

24-03-2009

செல்லுபடியாகும் தொடர் இல. 400571929 - 400592410

ஜக்பொட் பரிசு ரூபா. 2,985,850/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 218,030 | 20/- | 4,360,600/- |
| 2 இலக்கங்கள் | 19,992 | 40/- | 799,680/- |
| 1 இல. + லக்கினம் | 19,932 | 60/- | 1,195,920/- |
| 2 இல. + லக்கினம் | 1,832 | 200/- | 366,400/- |
| 3 இலக்கங்கள் | 543 | 1000/- | 543,000/- |
| 3 இல. + லக்கினம் | 41 | 10,000/- | 410,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,985,850/- | - |
| மொத்தம் | | | 8,275,600/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 260,378 | | 8,775,600/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 3,959,700/-

தொடர் இலக்கம் 500000001 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2009 மார்ச் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| மாத்தறை | 400576075-9-13 |
| களுத்துறை | 400573589-6-23 |
| கொழும்பு | 400589049-1-09 |
| கம்பஹா | 400581608-4-06 |
| காலி | 400576407-7-11 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சேன் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


## நான்காம் ஆண்டு நினைவலைகள்

### அமரர் கதிர்காமு சந்திரலிங்கம்



தோற்றம்: 05.03.1952
மறைவு: 26.03.2005

பாசமிகு எம் தந்தையே!
நேசமிகு எம் குடும்பத்தின் ஆணிவேரே!
அழகான எம் குடும்பத்தின் அர்த்தமான பரம் பொருளே
எமைவிட்டு சென்றீர்களோ?
ஆண்டுகள் நான்காயினும் ஆறாது எம் நினைவுகள்.


பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேர்த்தி

8/22, கற்குளலேன், கொட்டடி, யாழ்ப்பாணம். (83810)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செல்லப்பா சுவாமிகளின் குருபூசைத் தினம்

யாழ்ப்பாணம், மார்ச் 26



தேரடி செல்லப்பா சுவாமிகளின்94ஆவது ஆண்டு குரு பூசைத் தினம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8மணிக்குசெல்லப்பா சுவாமிகளின் நினைவாலயத்தில் கொண்டாடப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் காலையில் நற்சிந்தனைப் பாடல் ஆரம்பமாகவுள்ளதால் விரும்பிய அடியார்கள் பங்குகொள்ள முடியும். அத னைத் தொடர்ந்து அன்றைய தினம் முற் பகல் 11 மணிக்கு தேவார இசை மணி கே.எஸ்.ஆர்.திருஞான சம்பந்தனின் திருமுறைப் பண்ணிசை இடம்பெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து நற்சிந்தனைப் பாடல்களும் இறுதியில் மகேஸ்வர பூசையும் இடம்பெறும். (201)

## முன்பள்ளிகளுக்கு உபகரணங்கள்

நல்லூர், மார்ச் 26

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றப் பகுதிகளுக்கு உட்பட்ட முன்பள்ளிகளுக்குத் தேவையான ஆசிரியர்களுக்கான மேசைகள், உருக்கு அலுமாரி, கரும்பலகை, பிளாஸ்டிக் மேசைகள், தொலைக்காட்சிப் பெட்டி போன்ற பொருள்களை யாழ். மாநகரசபை வழங்கியுள்ளது.

2008ஆம் ஆண்டுக்கான 'கமநெகும' வேலைத்திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி உதவிகள் திரும்பச் சென்ற நிலையில் மாநகர ஆணையாளரின் முயற்சியால் மீளப் பெறப்பட்டு முன்பள்ளிகளுக்கான இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

7 லட்சத்து 60 ஆயிரம் ரூபா செலவில் பெறப்பட்ட மேற்படி பொருள்கள் மாநகராட்சி மன்றத்தில் வைத்துக் கையளிக்கப்பட்டது.

சுமார் 15 வரையான முன்பள்ளிகள் இந்த உபகரணங்களைப் பெற்றுக் கொண்டன. (203-111)

## பயிற்சி நெறிகளுக்கும் பதிவுகள் செய்யலாம்

வண்ணை, மார்ச் 26

கடல் வரைபடம் வாசித்தல் மற்றும் தகவல் தொழில் நுட்பம், சற்றலைட் உபகரணங்கள் இயக்குதல் ஆகிய பயிற்சி நெறிகளைப் பெறவிரும்புவோர் எதிர்வரும் 8ஆம் திகதிக்கு முன்பாக 372, பாங்ஷால் வீதியில் அமைந்துள்ள கடலோட்டு இயந்திரவியல் கல்லூரியில் நேரில் சமுகமளித்து பதிவுகளை மேற்கொள்ளலாமென கல்லூரி உதவிப் பணிப்பாளர் இ.செபஸ்தியாம்பிள்ளை தெவித்துள்ளார்.

வாரத்தில் இருநாள்கள் வீதம் 10 நாள்கள் பயிற்சிகள் நடத்தப்படும். இது சம்பந்தமான மேலதிக விவரங்களைப் பெற விரும்புவோர் 021-222-6251 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டும் விவரங்களைப் பெற்றுக் கொள்ள முடியுமெனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (203-160)

### சாவகச்சேரி வைத்தியசாலையில் இருந்து

# யாழ்.போதனா வைத்தியசாலைக்கு தனியார் வாகனத்தில் நோயாளர்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 26

சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படும் அவசர நோயாளர்கள் தனியார் வாகனங்கள் மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு செல்ல வேண்டிய நிலை அப்பிரதேச மக்களுக்கு ஏற்பட்டுள்ளது என்று கவலை தெரிவிக்கப்படுகின்றது.

தென்மராட்சிப் பிரதேச மக்களின் வைத்தியசாலையாக இயங்கும் சாவகச்சேரி வைத்தியசாலையில் இரண்டு நோயாளர் காவு வண்டிகள் இருந்தும் அவசர நோயாளர்களை தனியார் வாகனங்களில் கொண்டு செல்வதாக அப்பிரதேச மக்கள் கவலை தெரிவித்தனர்.

அண்மைக் காலமாக நோயாளர் காவு வண்டிகள் நலன்புரி நிலையங்களில் உள்ள நோயாளர்களை ஏற்றிவிருக்கும் பணிகளில் ஈடுபடுத்தப்படுகின்றன.

இதனால் அவசர நோயாளர்களைத் தனியார் வாகனங்களில் யாழ்ப்பாணம் கொண்டு வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை நலன்புரி நிலையங்களில் இருந்து தினமும் நூற்றுக்கு மேற்பட்டோர் சாவகச்சேரி வைத்தியாலைக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுவோரும், விடுதிகளில் சிகிச்சை முடிந்து வெளியேறுபவர்களும் மணிக்கணக்கில் வைத்தியசாலை விறாந்தைகளிலும் மர நிழல்களிலும் காத்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நோயாளர் காவு வண்டியில் ஒரு தடவை பத்துப் பேர் மட்டும் அழைத்து வரப்படுவதாகவும் இதனால் வாகனத்தில் நெரிபட்டு பயணிப்பதால் நோயின் தாக்கம் அதிகரிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனால் பேருந்து சேவையினை நலன்புரி நிலையங்களிலிருந்து நடத்தினால் ஒரே தடவையில் பெருமளவு நோயாளர்கள் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படுவதையும் சிகிச்சை முடிந்தவர்கள் விரைவில் நலன்புரி நிலையங்களுக்குச் செல்லவும் முடியுமெனவும் நோயாளர்கள் தெரிவித்தனர். (203-207)

# கொடிகாமம் அரசினர் வித்தியாலய வகுப்பறைத் தொகுதியில் இட நெருக்கடி

யாழ்ப்பாணம், மார்ச் 26

கொடிகாமம் அரசினர் வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட வகுப்பறைத் தொகுதிகளில் பெரும் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வித்தியாலய கட்டடங்களில் நலன்புரி நிலைய மக்கள் தங்கியுள்ளதால் வித்தியாலய வளாகத்தில் 'யுனிசெவ்' நிறுவனத்தினரால் தற்காலிக வகுப்பறைத் தொகுதிகள் அமைக்கப்பட்டன.

மிருசுவில், கொடிகாமம் நலன்புரி நிலைய மாணவர்களுடன் வித்தியாலய மாணவர்களையும் இணைத்து வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அண்மையில் 168 மாணவர்கள் வந்துள்ளதால் அவர்களை இணைப்பதற்கு போதிய இடவசதி இல்லாததால் இன்னமும் அவர்கள் இணைக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

வித்தியாலய வளாகத்தில் மேலும் வகுப்பறைத் தொகுதிகள் அமைக்கப்படும் பட்சத்தில் புதிய மாணவர்களை இணைக்க முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை கைதடி நலன்புரி நிலையங்களில் உள்ள மாணவர்களை அருகில் உள்ள பாடசாலையில் இணைப்பதற்கான நடவடிக்கைகளைக் கல்வித் திணைக்களத்தினர் மேற்கொண்டு வருகின்ற போதிலும் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து தொடர்பான பிரச்சினைகளால் இன்னமும் முடிவு காணப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (207)

# கல்வி விழிப்புணர்வு செயலமர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 26

வலிகாமம் வலயக்கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில் கல்வி விழிப்புணர்வுச் செயலமர்வு நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சாந்தை கிராம அபிவிருத்திச் சங்க கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கல்வி வலய முறைசாராக் கல்வி செயற்றிட்ட அலுவலர் ந.சண்முகராஜா தலைமையில் நடைபெறும் செயலமர்வில் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் திருமதி ரூபிணி வரதலிங்கம், பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரலிங்கம், சிறுவர் உரிமை மேம்பாட்டு அலுவலர் திருமதி பி.சத்தியவதனி, சாந்தை சித்தம்பல வித்தியாலய அதிபர், கிராம அலுவலர், எழுத்தறிவூட்டல் ஆசிரியர் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்குவுள்ளனர். (201)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், மார்ச் 26

மாதகல்- பாணாவெட்டி புவனேஸ்வரி அம்மன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. அதனைத் தொடர்ந்து எதிர்வரும் 9ஆம் திகதி வியாழக்கிழமை பிராயச்சித்த அபிஷேகம் நடைபெறும். (201)

* * *

கோண்டாவில் தில்லையம்பதி சிவகாமி அம்பாள் ஆலயத்தில் பங்குனி உத்தர இலட்ச அர்ச்சனை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத்தினங்கள் நடைபெற்றுப் பத்தாவது நாளான 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும் 64 உபசார விசேட பூசை வழிபாட்டுடன் இலட்ச அர்ச்சனை நிறைவு பெறவுள்ளது.

எதிர்வரும் 8ஆம் திகதி புதன்கிழமை காலை 7 மணிக்கு மேற்படி ஆலயத்தில் பங்குனி உத்தர நவோத்திர சகஸ்ர 1008 சங்காபிஷேகம் இடம்பெறவுள்ளது. மறுநாள் வியாழக்கிழமை பௌர்ணமி திருவிளக்குப் பூசை நடைபெறும். (201)

* * *

யாழ்ப்பாணம், மார்ச் 26

கொக்குவில் மேற்கு ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பதினைந்து நாள்கள் திருவிழா இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 8ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (201)

* * *

யாழ்ப்பாணம், மார்ச் 26

சங்கானை பட்டினசபை ஒழுங்கையில் உள்ள உருத்திர வைரவர் ஆலய கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெறவுள்ளது. (9)

* * *

வவுனியா கோவிற்குளம் அகிலாண்டேஸ்வரர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நேற்றுப் புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

தொடர்ந்து 17 நாள்கள் நடைபெறவுள்ளது. இதில் எதிர்வரும் 7ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (9)


# அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றியவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், மார்ச் 26

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றி வந்த வாகனத்தின் சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸார் அனுமதிப் பத்திரமின்றி வாகனத்தில் மணல் ஏற்றி வந்ததாக கெற்பேலியைச் சேர்ந்த நபருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது குறிப்பிட்ட நபருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் 5 மாத சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (203-201)



ஐ.எல்.ஓ.நிறுவனத்தின் நிதி உதவியுடன் நல்லூர்ப் பிரதேச செயலகத்தின் ஜே/116 கிராம அலுவலர் பிரிவில் சி.பீ.ஸ்ரீ திட்டத்தின் அழகுக்கலைப் பயிற்சி நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. நிலையத்தின் பெயர்ப்பலகையை நல்லூர்ப் பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் எஸ்.இரவீந்திர சர்மா திரை நீக்கம் செய்வதை முதலாவது படத்திலும்-

நல்லூர்ப் பிரதேச செயலர் ப.செந்தில்நந்தனன் உரையாற்றுவதை இரண்டாவது படத்திலும் பயனாளிகளின் ஒரு பகுதியினரை மூன்றாவது படத்திலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கைத் தமிழ் உறவுகளை கைகழுவி விட்டார் கருணாநிதி

## கடுமையாகக் குற்றஞ்சாட்டுகிறார் ராமதாஸ்



சென்னை, மார்ச் 26

இலங்கைத் தமிழர்களையும், அவர்களது நலன்களையும் கை கழுவிவிட்டார் முதல்வர் கருணாநிதி - என்று குற்றஞ் சாட்டியுள்ளார் பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ்.

"இலங்கை ஓர் இறையாண்மை மிக்க நாடு, அப்படி இறையாண்மை மிக்க ஒரு நாட்டின் மீது ஒரு குறிப்பிட்ட அளவுக்குத்தான் அழுத்தத்தைக் கொடுக்க முடியுமே தவிர அதற்கு மேல் எதுவும் செய்ய முடியாது" - என்ற ரீதியில் தமிழக முதல்வர் கூறியிருப்பது ஆச்சரியமாகவும், அதிர்ச்சியாகவும் இருக்கிறது - என்றும் அவர் தெரிவித்தார்.

இதுகுறித்து திங்கட்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கையின் விவரம் வருமாறு -

இலங்கை இனப் படுகொலைப் போரைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுங்கள் என்ற உலகத் தமிழர்களின் குரல் இப்போது தான் உலக நாடுகளின் காதுகளில் எட்டத் தொடங்கி இருக்கிறது.

அதன் விளைவாக, அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், கனடா போன்ற நாடுகள் போரை நிறுத்தும்படி ஓங்கி குரல் கொடுக்கத் தொடங்கியிருக்கின்றன.

வெறும் மனிதாபிமான அடிப்படையில், உலக நாடுகள் செயற்படத் தொடங்கியிருக்கும் இந்த நேரத்தில் ஈழத் தமிழர்களைப் பாதுகாப்பதில் உணர்வுபூர்வமாகச் செயற்பட வேண்டிய கட்டாயத்தில் உள்ள இந்திய அரசு இதுவரை வேடிக்கை மட்டுமே பார்த்துக் கொண்டிருக்கிறது.

ஈழத் தமிழர்களைப் பாதுகாக்கும் கடமையைத் தாமதமின்றி இந்திய அரசு ஆற்ற வேண்டும் என்று வலியுறுத்த வேண்டிய மிகப்பெரிய பொறுப்பு தமிழக அரசுக்கு இருக்கிறது. இத்தகைய சூழ்நிலையில், "இலங்கை ஓர் இறையாண்மை மிக்க நாடு, அப்படி இறையாண்மை மிக்க ஒரு நாட்டின் மீது ஒரு குறிப்பிட்ட அளவுக்குத்தான் அழுத்தத்தைக் கொடுக்க முடியுமே தவிர அதற்கு மேல் எதுவும் செய்ய முடியாது" - என்ற ரீதியில் தமிழக முதல்வர் கூறியிருப்பது ஆச்சரியமாகவும், அதிர்ச்சியாகவும் இருக்கிறது.

இதற்கு மேல் எதுவும் செய்வதற்கில்லை என்று இலங்கைத் தமிழர்களையும், அவர்களது நலன்களையும் தமிழக அரசும், முதல்வரும் கை கழுவிவிட்டனர் என்பதையே முதல்வர் கருணாநிதியின் கருத்து எடுத்துக் காட்டுகிறது.

இறையாண்மை மிக்க அண்டை நாட்டில் நடைபெறும் பயங்கர நிகழ்வுகளில், இந்தியா ஓரளவுக்கு மேல் தலையிட முடியாது என்ற தவறான கருத்து இதுவரை டில்லியில் தான் இருந்தது.

இப்போது, சென்னைக்கும் அது பரவிவிட்டது என்பதையே முதல்வரின் கருத்து எடுத்துக் காட்டுகிறது. ஒரு நாட்டின் இறையாண்மை என்பதில், அந்த நாட்டில் வாழும் எல்லாத் தரப்பு மக்களையும், பாதுகாப்பதற்கான முதன்மையான பொறுப்பு அடங்கி இருக்கிறது.

இதனை பல ஆண்டுகளுக்கு முன்பே ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்தி இருக்கிறது. ஒரு நாட்டின் அரசு திட்டமிட்டு மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் விளைவாக, இனப் படுகொலை செய்யும் நோக்கில் அல்லது வேறு நோக்கில் பெருமளவு உயிரிழப்பு ஏற்படும்போது அல்லது ஏற்படலாம் என்று சந்தேகப்படும்போது, இதர நாடுகளின் போர்ப் படையின் தலையீடும் அவசியமாகிறது என்று ஐக்கிய நாடுகள் சபை வகுத்துத் தந்துள்ள வழிகாட்டு நெறிமுறைகளில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

உள்நாட்டுப் போர், கலகம், அடக்குமுறை அல்லது அரசின் தோல்வியின் விளைவாக மக்கள் துன்பப்பட்டால், சம்பந்தப்பட்ட நாடு, அதைத் தடுக்க அல்லது தவிர்க்க விரும்பவில்லையானால் அல்லது இயலவில்லையானால் அங்கு தலையிடாமைக் கொள்கை என்பது பாதுகாப்பதற்கான பன்னாட்டுப் பொறுப்புக்கு வழிவிட்டு விலகுகிறது என்றும் ஐக்கிய நாடுகள் சபை சாசனத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கோட்பாட்டின் அடிப்படையில் தான் இதுவரையில் உலகின் பல்வேறு பகுதிகளில் பல்வேறு நாடுகள் தலையிட்டு இனப் படுகொலையைத் தடுத்து நிறுத்தி இருக்கின்றன.

இலங்கை அரசின் பொருளாதாரத் தடையினால், ஈழத் தமிழர்கள் பட்டினியால் வாடிய போது, இந்தியா தனது போர் விமானங்களை அனுப்பி, உணவுப் பொருள்களை விநியோகம் செய்திருக்கிறது.

ஈழப் போராளிக் குழுக்களுக்கு இந்தியாவில் பயிற்சி அளிக்கப்பட்டு இருக்கிறது. அவையெல்லாம், இந்தக் கோட்பாட்டின் அடிப்படையில்தான். அப்போதெல்லாம், இலங்கை ஒரு இறையாண்மை மிக்க நாடு என்று இந்தியா கருதவில்லை.

ஈழத் தமிழர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில்தான் இந்தியா அப்போது செயல்பட்டது. அத்தகைய உணர்வும், துணிச்சலும் இப்போது இந்திய அரசுக்கு வேண்டும்.

அத்தகைய உணர்வை இந்திய அரசு பெறவும், துணிச்சலோடு செயற்படவும் தமிழக அரசும், முதல்வரும் குரல் கொடுக்க வேண்டும். போரை நிறுத்தாவிட்டால் காமன்வெல்த் போன்ற அமைப்புகளில் இருந்து இலங்கையை வெளியேற்ற வேண் டும் என்ற குரல் இப்போது பிரிட்டனில் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியிருக்கிறது. இத்தகைய நடவடிக்கைகளுக்கு இந்தியா துணை நிற்க வேண்டும் - என்றுள்ளது.

புதுக்கடைத் திறப்பு விழா
கஜித் கட்டிடப் பொருள் விற்பனையகம்
Kajith Building Material Suppliers
27.03.2009
Kajith வெள்ளிக்கிழமை
காலை 6.15 மணிமுதல் 7.40
மணிவரையுள்ள சுபவேளையில்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
இல.866/1, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். உரிமையாளர் : பா.தர்ஷன்




உ
விநாயகர் துணை
சிவசக்தி மயம்
உபநயன பிரம்மோபதேஷ சுபமுகூர்த்த அழைப்பு
அன்புடையீர்!
ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்கலகரமான சர்வதாரி வருஷம் பங்குனித்திங்கள்
14ஆம் நாள் (27.03.2009) வெள்ளிக்கிழமை ரேவதி நட்சத்திரமும்,
அமிர்தயோகமும் கூடிய சுபநாளில் காலை 08.58 மணி முதல் 09.48
மணி வரையுள்ள இடப லக்கின சுபமுகூர்த்த வேளையில்
வறுத்தலைவிளான் சுப்பிரமணியஐயர் கமலாம்பிகைஅம்மா தம்பதியின்
பருத்தித்துறை வைத்தீஸ்வரஐயர் சரஸ்வதி அம்மா தம்பதியின்
பௌத்திரர்களும் எமது புத்திரர்களுமாகிய காசிப கோத்திரம்
ஜேஷ்ட புத்திரன் சிரஞ்சீவி
மு.பிரதாப சர்மாவுக்கும்
கனிஷ்ட புத்திரன் சிரஞ்சீவி
மு.கபில சர்மாவுக்கும்
வறுத்தலைவிளான், மருதடிப்பிள்ளையார் வல்லை வாலாம்பிகா சமேத
வைத்தீஸ்வரசுவாமி திருவருளும், குருவருளும் துணைகொண்டு
யக்ஞோபவீததாரண பிரம்மோபதேஷம்
செய்து வைப்பதற்கு பெரியோர்கள்,
அந்தண சிரேஷ்டர்களின் அருளாசியுடன் எமது இல்லத்தில்
நடைபெறவிருப்பதால் தாங்கள் இஷ்டமித்திரர் சகிதம் வருகை தந்து இவ்
வைபவத்தைச் சிறப்பித்து குமாரர்களை ஆசீர்வதிக்கும் வண்ணம்
அன்புடன் அழைக்கின்றோம்.
தங்கள் நல்வரவை விரும்பும்:
சு.முருகானந்த சர்மா
தனலட்சுமி அம்மா.

சஷ்டியப்த பூர்த்தி விழா வாழ்த்து
வறுத்தலைவிளான், மருதடிப்பிள்ளையார் ஆதீன கர்த்தாவாகிய
சுப்பிரமணிய ஐயர் - கமலாம்பிகை அம்மாவின் மகனும் எமது
அப்பாவும் ஆகிய முருகானந்த சர்மா - தனலட்சுமி அம்மா
தம்பதியரின் சஷ்டியப்த பூர்த்தி விழா எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
நடைபெறுவதையிட்டு இன்னும் பல்லாண்டு காலம் நீஊழி வாழ வாழ்த்துவோர்:
முரளி - ராஜி தம்பதியர்,
சாருஜினி,
உமாகாந்த சர்மா,
பிரதாபன், கபிலன்,
பேரன்: பிரதீப்.
07, பிரப்பங்குளம் வீதி,
யாழ்ப்பாணம்.
(83746)

# கேள்வி அறிவித்தல்

## மின்பொறியியலாளர் (மத்திய மின் நிலையம்) - சுன்னாகம் அலுவலகத்துக்கு தேர்ச்சியற்ற தொழிலாளர்களின் சேவையைப் பெற்றுக்கொள்ளல்

## (Obtaining The Service of Unskilled Labourers For Electrical Engineer (Power Plants)' Office- Chunnakam)

### கேள்வி இல: NP/DGM/2009/07

மேல் குறிப்பிடப்பட்ட சேவைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்வி (Tender) 2009.04.27 ஆம் திகதி பிற்பகல் 3 மணிவரை இலங்கை மின்சாரசபை (வடமாகாணம்) மாகாண கொள்வனவுக்குழுத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்வியாளர்கள், கேள்விப்பத்திரங்களை ரூபா 1000.00 (ஆயிரம்) இற்கான கொடுத்தல் பத்திரத்தினை எமது அலுவலகத்தில் பெற்று வங்கியில் பணத்தினை செலுத்துவதன் மூலம், அல்லது பொதுமுகாமையாளர், இலங்கை மின்சார சபை, கொழும்பு என்ற பெயரில் பெறப்பட்ட வங்கிக்கட்டளையாகவோ சமர்ப்பித்து, இல: 500, கே.கே. எஸ்.வீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திலுள்ள பிரதிப்பொது முகாமையாளர், (வடமாகாணம்) அலுவலகத்தில் 2009ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24ஆம் திகதி வரை வேலை நாள்களில் காலை 9 தொடக்கம் பிற்பகல் 3 வரை பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விகள் 27.04.2009 பிற்பகல் 3 மணிக்கு பிரதிப் பொதுமுகாமையாளர் (வடக்கு), இலங்கை மின்சாரசபை, 500, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் அலுவலகத்தில் திறக்கப்படும். அத்தருணம் கேள்வியாளர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்டவர் சமுகமளிக்கலாம்.

கேள்வியாளர்கள் இலங்கை மின்சாரசபையிலிருந்து பெறப்பட்ட கேள்விப் பத்திரங்களில் மாத்திரம் இணைப்பிரதிகளில் (Duplicate) பூர்த்தி செய்து, கடித உறையிலிட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் "தேர்ச்சியற்ற தொழிலாளர்களின் சேவையை மின்பொறியியலாளர் (மத்திய மின் நிலையம்) - சுன்னாகம் அலுவலகத்துக்கு பெற்றுக் கொள்ளல்" எனக் குறிப்பிட்டு மேற்குறித்த முகவரிக்கு 27.04.2009ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு முன்னர் கிடைக்கும்படி பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும். அல்லது இவ்வலுவலகத்திலுள்ள கேள்விப்பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். இவ்வறிவித்தல் தொடர்பான மேலதிக விவரங்களை கீழ்க்குறிப்பிட்ட விலாசத்தில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

மாகாணகொள்வனவுக் குழு
(வடமாகாணம்),
பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகம்,
இலங்கை மின்சார சபை,
இல.500, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல.: 021-222 2496,
021-222 3233
தொலைநகல் இல.: 021-222 2497

தலைவர்,
மாகாண கொள்வனவுக் குழு
(வடமாகாணம்)

"சூழல் அபிவிருத்தி வேலைகளிற்கு கை கொடுக்கும்"
இலங்கை மின்சார சபை.

(சி/557631)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கல்விச் சுடர்

## தரம் - 05 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான தயார்ப்படுத்தல் பரீட்சைத் தொடர் -


வினாத்தாள் - I நேரம்: 75 நிமிடங்கள்


* கீழே முதலாவதாகத் தரப்பட்டுள்ள உருவுடன் தொடர்பற்ற உருவின் கீழ்க் கோடிடுக.





* மூன்றாம், நான்காம் வினாக்களில் தரப்பட்டுள்ள உருக்களில் ஒன்று ஏனைய இரண்டு உருக்களில் இருந்து வேறுபடுகிறது அவ்வாறு வேறுபடும் உருவினைத் தெரிந்து அதன் கீழ்க்கோடிடுக.





* ஐந்தாம், ஆறாம் வினாக்களில் உள்ள கருத்துக்குரிய மிகப்பொருத்தமான பழமொழியினைத் தெரிந்து அதன் கீழ்க்கோடிடுக.

05. ''இறந்தகாலச் செயல்களில் எதிர்காலம் புலப்படும்''
1) இளங்கன்று பயம் அறியாது.
2) விளையும் பயிரை முளையிலே தெரியும்.
3) தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்.

06. ''ஒற்றுமையாக வாழ்வது அதிக பயனைத்தரும்''
1) கூழானாலும் குளித்துக்குடி.
2) ஏட்டுச்சுரக்காய் கறிக்கு உதவாது.
3) அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.

* கீழேயுள்ள கூற்றுக்கள் ஒழுங்குமாறித் தரப்பட்டுள்ளன அவற்றை ஒழுங்குபடுத்தினால் ஒரு சம்பவம் உருவாகும் சரியான முறையில் ஒழுங்குபடுத்தப்பட்ட விடையின் கீழ்க்கோடிடுக.

07. அ - பயிரை நாட்டி உரியமுறையில் பராமரித்தல்.
ஆ - நிலத்தை துப்பரவு செய்து பண்படுத்தல்.
இ - நன்கு முற்றிய காய்களை அறுவடை செய்தல்.
ஈ - பயிர்களுக்கு ஏற்ற முறையில் பாத்தி அமைத்தல்.
உ - அறுவடை செய்த காய்களை விற்று வருமானம் பெறல்.
1) ஆ, அ, ஈ, இ, உ 2) ஆ, ஈ, அ, இ, உ 3) அ, ஆ, ஈ, இ, உ

* கீழேயுள்ள கூற்றுக்களை வாசித்து 8ஆம், 9ஆம் வினாக்களுக்குரிய மிகப் பொருத்தமான விடையினை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

08. நான் பல வீடுகளிலும், பாடசாலைகளிலும் வேறு கட்டங்களிலும் பிரதானமாக உள்ளேன். என்னை தீயினுள் சுட்டாலும் நான் உறுதியாகவே இருப்பேன். ஆசிரியர்கள் கணித பாடத்தை கற்பிக்கும்போது என்னை உதாரணமாகக் கூறுவார்கள் அப்படியாயின் எனது பெயர் என்ன?

..........................................................

09. நான் நீரிலும் வசிப்பேன் நிலத்திலும் வசிப்பேன் நான் மெதுவாகவே செல்வேன். ஆயிரம் முட்டைகளை இட்டாலும் நான் அமைதியாகவே இருப்பேன். நான் சில வேளைகளில் கல்போலக் கிடப்பேன் நான் யார்?

..........................................................

* கீழே அடைப்புக்குள் தரப்பட்டுள்ள எழுத்துக்களை கொண்டு 10ஆம், 11ஆம் வினாக்களுக்குரிய மிகப்பொருத்தமான விடையினைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

ங், வெள, ர, தி, ட், ம், பு, ள், டா, ல், வா, கி, மி, க, ல

10. பறக்கும் முலையூட்டி என அழைக்கப்படும் பிராணி?

..........................................................

11. மாதத்தைக் குறிக்கும் வேறு ஒரு சொல்?

..........................................................

* கீழேயுள்ள பாடலை வாசித்து 12 - 13 வரையான வினாவிற்கு விடை தருக.

*பட்டுக்கறுப்பு உடலழகு*
*பார்வை சாயும் விழியழகு*
*வெட்டெனப் பறக்கும் வேளையிலே*
*விந்தை உந்தன் சிறகழகு*

12. இப்பாடலில் கூறப்பட்ட பறவை எது?


..........................................................

13. ''விந்தை'' என்பதன் கருத்து யாது?

..........................................................

* கீழேதரப்பட்டுள்ள வரிப்படத்தை அவதானித்து அதன் கீழேயுள்ள வினாக்களுக்குரிய மிகச்சரியான விடையினைத் தெரிந்து கோடிடுக.

14. வட்டத்திற்கு மட்டும் உரிய இலக்கங்கள் எவை?
1) 4, 5, 6, 7
2) 6, 7
3) 4, 5,





15. வட்டத்திற்கும் செவ்வகத்திற்கும் பொதுவான இலக்கங்கள் எவை?
1) 8, 3, 4, 5 2) 6, 7 3) 4, 5, 6, 7

* 16ஆம், 17ஆம் வினாக்களில் பருமனின் அடிப்படையில் அதிகரித்துச் செல்லும் சரியான ஒழுங்கு முறையின் கீழ்க்கோடிடுக.


16. 1) சென்ரிமீற்றர், மீற்றர், மில்லிமீற்றர், கிலோமீற்றர்.
2) மீற்றர், கிலோமீற்றர், சென்றிமீற்றர், மில்லிமீற்றர்.
3) மில்லிமீற்றர், சென்ரிமீற்றர், மீற்றர், கிலோமீற்றர்.

17. 1) கிராமம், நாடு, மாவட்டம், மாகாணம்.
2) மாகாணம், மாவட்டம், கிராமம், நாடு.
3) கிராமம், மாவட்டம், மாகாணம், நாடு.

18. 1432 + 610 இவ் எண் கூட்டுத்தொகையின் பெறுமானத்தைக்காட்டும் எண் சட்டம் எது?




19. கீழேயுள்ள உருவங்களுள் வித்தியாசமான உருவின் கீழ்க்கோடிடுக.





20. கீழேயுள்ள கணிதச்செய்கையினை அவதானித்து A, B ஆகும் இடங்களில் வரவேண்டிய எண்களைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

$$\begin{array}{r} 3\ 8\ 5 \\ +\ A\ 4\ B \\ \hline 9\ 3\ 4 \\ \hline \end{array}$$

1) A = 5, B = 8
2) A = 4, B = 6
3) A = 5, B = 9

21. இரு எண்களின் கூட்டுத்தொகை 15 ஆகும். அவ்விரு எண்களையும் மூன்றால் வகுத்த பின் அவற்றினைக் கூட்டும்போது விடை 5 உம், பெருக்கும் போது 6உம் ஆகும். அவ்விரு எண்களும் யாவை?
1) 12, 3 2) 9, 6 3) 10, 5

22. கீழே சில கடிகார முகப்புகளில் நேரங்கள் குறிக்கப்பட்டுள்ளன அவற்றுள் பிழையான முறையில் நேரம் குறிக்கப்பட்டுள்ள கடிகார முகப்பின் கீழ்க்கோடிடுக.



1) 6.00 2) 2.15 நிமிடம் 3) 12.30 நிமிடம்

23. மோட்டார் வாகனம் 5km தூரம் செல்ல 40 நிமிடம் எடுத்தது எனின், 7km தூரம் செல்ல எத்தனை நிமிடம் தேவை?
1) 1 மணித்தியாலம். 2) 56 நிமிடம். 3) 35 நிமிடம்.

* இல. 24ஆம், 25ஆம் வினாக்களுக்கு தரப்பட்ட சொற்களுடன் தொடர்புடைய விடையைத் தெரிந்து அதன் கீழ்க்கோடிடுக.

24. ஓடும் - நீந்தும் - பாயும்,
1) தவளை. 2) அணில். 3) ஆமை.

25. செவிப்புலன் - செய்தி - மின்சாரம்,
1) புத்தகம். 2) தொலைக்காட்சி. 3) வானொலி.

* இல. 26ஆம், 27ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்கூட்டங்களில் வேறுபட்ட சொல் அமைந்துள்ள சொற்கூட்டத்தினைத் தெரிந்து அதன் கீழ்க்கோடிடுக.

26. 1) கூறினான், பேசினான், உரைத்தான், கதைத்தான்.
2) உட்கார்ந்தான், அமர்ந்தான், இருந்தான், எழும்பினான்.
3) தினகரன், அருக்கன், சூரியன், கதிரோன்.

27. 1) நெருப்பு, தீ, அக்கினி, அனல்.
2) அழகு, வனப்பு, வடிவு, லட்சணம்.
3) ஆசிரியர், உபாத்தியர், பாடசாலை, குரு. (8 ஆம் பக்கம் பார்க்க...)

**எதிர்வரும் வியாழக்கிழமை திருகோணமலை மாவட்ட பிரபல ஆசிரியர்களான திரு.பி.பத்மநேசன்,திரு.எஸ்.தயாளலிங்கம் ஆகியோர் தொகுத்து வழங்கும் வினாத்தாள் - 11 வெளிவரும் என்பதை மாணவர்களுக்கு கல்விச் சுடர் அறியத்தருகின்றது.**

**அன்பு மாணவர்களே!**

இப்பகுதியில் வெளியாகியுள்ள வினாத்தாள் - 1 இற்கான விடை[illegible] வினாத்தாள் - 11 எதிர்வரும் வியாழக்கிழமை பிரசுரமாகும். இப்பகுதியில் தொடர்ச்சியாக வெளிவரும் வினாத்தாள்களை நேரங்கணித்துப் பயிற்சிசெய்து இவ் வருடம் நடைபெறவுள்ள அரச பரீட்சைக்கு இன்றே தயாராகுங்கள். உங்கள் விடைகளை ஆசிரியரின் விடைகளுடன் ஒப்பிட்டுப்பார்க்க மறவாதீர்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

* கீழேயுள்ள பந்தியினை வாசித்து 28ஆம், 29ஆம் வரையான வினாக்களுக்குரிய மிகப்பொருத்தமான விடையினைத் தெரிந்து கோடிடுக.


ராணி, உமா, சரோ, கமலா ஆகிய நால்வரும் சகோதரர்கள் ராணி சரோவினை விட மூத்தவள் கமலா சரோவினை விட இளையவள். உமா, கமலாவை விட மூத்தவள் ஆனால் சரோவை விட இளையவள்.

28. இவர்களுள் மிகவும் வயது கூடியவர் யார்?
1) உமா. 2) சரோ. 3) ராணி.


29. இவர்களுள் மிகவும் இளையவள் யார்?
1) கமலா. 2) உமா. 3) சரோ.

30. வயது குறைந்ததிலிருந்து வயது கூடியது வரை ஒழுங்கு முறையில் எழுதினால் அமையும் சரியான ஒழுங்கு முறை யாது?
1) உமா, ராணி, சரோ, கமலா.
2) ராணி, சரோ, உமா, கமலா.
3) கமலா, உமா, சரோ, ராணி.

31. கீழேயுள்ள உலர்மின் கலங்களில் மிகச்சரியான முறையில் வரையப்பட்டுள்ள உலர்மின் கலம் எது?
1) 2) 3)



32. அட்டைத் துண்டிலுள்ள அ இவ் எழுத்தினை முகம் பார்க்கும் கண்ணாடியின் முன் பார்க்கும்போது
அவ்வெழுத்து தோன்றும் சரியான முறை எது?
1) 2) 3)



* இல. 33ஆம், 34ஆம் வினாக்களிற்குரிய மிகப்பொருத்தமான விடையினைத் தெரிந்து அதன் கீழ்க்கோடிடுக.

33. கடல் : 345, மடல் : 845 எனின், உடல் என்பது எழுதப்படும் சரியான முறை,
1) 385 2) 946 3) 745

34. குஞ்சு ○△□, பட்டு ✡◙△ எனின், பஞ்சு என்பது எழுதப்படும் சரியான முறை,
1) 2) 3)




35. டேவிட், ஜோன்சன் ஆகிய இருவரும் சகோதரர்கள். டேவிட் கூறினான் எங்கள் குடும்பத்தில் மூன்று ஆண்பிள்ளைகளும் இரு பெண்பிள்ளைகளும் உள்ளனர். ஜோன்சன் கூறினான் எனக்கு இரண்டு சகோதரர்களும் இரண்டு சகோதரிகளும் உள்ளனர். எனவே அக்குடும்பத்தில் ஆண், பெண் பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?
1) 3 ஆண்கள், 2 பெண்கள். 2) 5 ஆண்கள், 2 பெண்கள். 3)4 ஆண்கள், 2 பெண்கள்.

36. 2006ஆம் ஆண்டு யூன் மாதம் 30ஆம் திகதி எனது 8ஆவது பிறந்த தினமாகும். இவ் ஆண்டு எனது 10ஆவது பிறந்த தினம் முடிவடைந்து விட்டது. எனது முதலாவது பிறந்ததினம் கொண்டாடப்பட்ட ஆண்டு எது?
1) 1998 2) 1999 3) 1997


* கீழேயுள்ள எண் கோலத்தினை அவதானித்து 37ஆம், 38ஆம் வினாக்களிற்குரிய விடையினை உரிய வெற்றுக் கூண்டினுள் எழுதுக.

37.




.................................

38.




.................................

39. இரண்டு கம்பங்களுக்கிடையிலான தூரம் 10m அவ்வாறான சம இடைவெளியுள்ள 8 கம்பங்களுக்கிடையிலான தூரம் எவ்வளவு?
.................................

40. அண்ணாவின் வயது 18 ஆகும். நான் அண்ணாவை விட 9 வயது இளையவன். இன்னும் 5 வருடங்களில் பின் எனது வயது என்ன?
.................................

ஆக்கம்:- திரு.பி.பத்மநேசன் -
திரு.எஸ்.தயாளலிங்கம்,
A.C.A கல்வி நிலையம், திருமலை.

## கடந்த 19.03.2009 இல் வெளிவந்த வினாத்தாள் 11 இற்கான விடைக்குறிப்புக்கள்

01. 1 - 3, 2 - 2, 3 - 2, 4 - 2, 5 - 1, 6 - 1 - தோழன், 2 - உள்ளம், 3 - அருள், 4 - கவி.
02. 1 - உயர்திணை, 2 - அஃறிணை, 3 -உயர்திணை, 4 - அஃறிணை, 5 - அஃறிணை, 6 - உயர்திணை, 7 - உயர்திணை, 8 - உயர்திணை
03. மஸ்றூபா, மானம், மின்னல், மீசை, முகம், மூடை, மெட்டி, மேகம், மொழி, மோர், மௌனம், மைதானம்.
04. 1 - 20ஆம் நூற்றாண்டின் பின்னர் கணினியின் பயன்பாடு அதிகரித்துள்ளது. 2 - எனது தம்பி மெல்ல மெல்ல எழுதுவான், 3 - வானம் நீல நிறமாகும், 4 - எனது தங்கை தடுமாற்றமின்றி படபட எனப் பேசுவாள், 5 - எனது சகோதரி அழும்போது மேளம்போல சத்தமிடுவாள்.
05. 1 - எப்பொழுதும் கற்க வேண்டும் , 2 - ஈன்ற தாயை எப்பொழுதும் மறக்கக்கூடாது, 3 - கற்றவர்களை கேலி செய்யக்கூடாது.
06. 1 - சரி, 2 - சரி, 3 - சரி, 4 - சரி, 5 - சரி
07. 1 - 3, 2 - 4
08. 1 - 1, 2 - 2
09. 1 - Apple, 2 - Ginger, 3 - Fan, 4 - Peacock
10. 1 - மாதுளம் பழம் , 2 - மாம்பழம், 3 - ஆடு, 4 - பசு
11. 1 - வரகா, 2 - சந்துகா, 3 - உதுர, 4 - இனிகம
12. 1 - 136, 2 - 12
13. அ - செவ்வகம், ஆ - சதுரம், 2 - தெற்கு
14. 1 - யாழ் - அம்பாறை, 2 - 69 + 18 = 87km, 3 - 46km
15. 1 - கறையான், 2 - மான், 3 - காபனீரொட்சைட், 4 - மழைநீர், 5 - D.S. சேனாநாயக்க, 6 - ரந்தெனிகல, 7 - எலி, 8 - பட்டு
16. 1 - 99909, 2 - 141, 3 - 6, 4 - 784
17. பொருத்தமான கருத்துள்ள வாக்கியங்கள்.

ஆசிரியர்:- திரு.வு.எல்.எம்.சாஜித்,
கல்முனை/அல் மஷ்ஹர் பெண்கள் உயர்தர பாடசாலை, நிந்தவூர்.



இருபாலை சி.சி.த.க.பாடசாலையில் மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்த கொண்ட டாக்டர் வை.தியாகராஜா, சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட எஸ்.தங்கவடிவேல் ஆகியோர் அதிபர், ஆசிரியர், மாணவர்கள் சகிதம் அழைத்து வரப்படுவதைப் படத்தில் காணலாம்.




யாழ்.நீராவியடியில் உள்ள ஐடியல் அக்கடமியில் கல்விகற்று கடந்த ஆண்டு நடைபெற்ற தரம் 9 மாகாண மட்டப் பொதுப் பரீட்சையில் கணித பாடத்தில் அதிகூடுதலான புள்ளிகளைப் பெற்ற மாணவி செல்வி குலேந்தினிக்கு கணித ஆசிரியரும் நிர்வாகியுமான வி.என்.பத்மநாதன் சைக்கிள் ஒன்றினை அன்பளிப்புச் செய்வதையும் நிகழ்வில் கலந்துகொண்ட பெற்றோர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.
(படம்:ஓங்காரன்)



ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலய மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது.
இந்த நிகழ்வில் அதிபர் ந.சிவகடாச்சம் தலைமையில் ஆரம்பக்கல்வி ஆலோசகர் திருமதி றூபா, இணைப்பாளர் செல்வி யோ.சோபனா, விரிவுரையாளர் [illegible] அதிபர் எஸ்.சச்சிதானந்தன் ஆகியோர் அழைத்து வரப்படுவதைப் படத்தில் காணலாம். (160)



கோப்பாய் தெற்கு சுந்தவேள் தமிழ்க் கலவன் பாடசாலை வருடாந்த மெய்வன்மைப் [illegible]லை மாணவர்கள் கூடி பயிற்சி செய்யும்போது எடுக்கப்பட்ட படம்.
(படம்:லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பு வலயங்களில் உள்ள பொதுமக்களை பாதுகாக்க இலங்கை அரசு தவறிவிட்டது

## அமெரிக்க செனட்டர் ஜோன் கெரி கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 26

இலங்கை அரச பாதுகாப்பு வலயங்களில் உள்ள தனது பொதுமக்களைப் பாதுகாக்க தவறியுள்ளமை காரணமாக சர்வதேச அளவில் இலங்கை அரசின் கௌரவத்திற்கு பாதிப்பு ஏற்பட்டு வருவதாக அமெரிக்காவின் பிரபல செனட்டரும் அந்நாட்டின் முன்னாள் ஜனாதிபதி வேட்பாளருமான ஜோன் கெரி எச்சரித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு கடந்த திங்கட்கிழமை எழுதியுள்ள கடிதத்திலேயே ஜனநாயகக் கட்சி செனட்டர் ஜோன்கெரி இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

விடுதலைப் புலிகள் வெளிப்படையாக செயல்களில் ஈடுபட்டுள்ள அதே வேளை, அரசால் பாதுகாப்பு வலயமென அறிவிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்கள் மற்றும் மருத்துவமனைகள் மீதே அரச படைகள் ஷெல் தாக்குதலை மேற்கொள்கின்றன. மனிதாபிமான உதவிகள் இந்த மக்களைச் சென்றடைவதில்லை என்ற தகவல்கள் குறித்து தான் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளார் எனவும் கெரி தெரிவித்துள்ளார்.

அரசு, பத்திரிகையாளர்களுக்கு எதிராக மேற்கொண்டுள்ள நடவடிக்கை குறித்தும் அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

இந்த நிலை சர்வதேச அளவில் இலங்கையின் தராதரத்திற்கும் நட்பு நாடுகளுடனான அதன் உறவுகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொதுமக்களைப் பாதுகாப்பது, இடம் பெயர்ந்தவர்களுக்கு மனிதாபிமான உதவியை வழங்குவது, அரச பாதுகாப்பு படையினரின் மனித உரிமை மீறல்களை விசாரிப்பது போன்ற நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு இலங்கை அரசுக்குள்ளதையும் தாம் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறார் எனவும் ஜோன்கெரி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் நண்பன் என்ற வகையில் அமெரிக்கா தொடர்ந்தும் உன்னிப்பாக நிலைமையை அவதானித்து வரும். சமாதானத்தை ஏற்படுத்த உதவுவதற்கும் தயாராகவிருக்கும் என்றும் கெரி தெரிவித்துள்ளார். (அ-சி)

## கலந்துரையாடல்

யாழ்.மாவட்ட மூத்த பிரஜைகள் பேரவையின் நிர்வாக உறுப்பினர்களுக்கும் மற்றும் மூத்த பிரஜைகள் சேவையாளர்களுக்குமான அவசர கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளதாக யாழ்.மாவட்ட சமூக நலத்துறைத் திணைக்கள இணைப்பாளர் த.கிருபாகரன் அறிவித்துள்ளார். (201-288)

# ஐ.தே.கவின் தயாசிறி எம்.பியிடம் குற்றத்தடுப்பு பிரிவினர் விசாரணை

கொழும்பு, மார்ச் 26

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவிடம் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் வாக்குமூலம் ஒன்றை கடந்த திங்கட்கிழமை பெற்றுக் கொண்டனர் எனத் தெரிவிக்கப் படுகிறது.

ரூபாவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவரும், பேராசிரியருமான தம்மிக்க கங்காநாத் திஸாநாயக்கவின் கடத்தல் சம்பவம் தொடர்பாகவே அவரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தயாசிறி எம்.பியிடம் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் விசாரணைக்கு வருமாறு அழைப்பு விடுத்திருந்தனர் என்பது தெரிந்ததே.

அண்மையில் பேராசிரியர் தம்மிக்க திஸநாயக்கா கடத்திச் செல்லப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-சி)

# ஐ.தே.கட்சியைப் பிளக்க ஜனாதிபதி முயலவில்லை

## அமைச்சர் டளஸ் சொல்கிறார்

கொழும்பு, மார்ச் 26

ஐக்கிய தேசிய கட்சிக்குள் பிளவை ஏற்படுத்தவோ அல்லது அக்கட்சியைப் பலவீனப்படுத்தவோ ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒருபோதும் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்று அமைச்சர் டளஸ் அழக பெரும தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

மேல் மாகாணத்தில் உள்ள 36 தேர்தல் தொகுதிகளிலும் நாம் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம்.

ஏப்ரல் இரண்டாம் திகதி முதல் முக்கிய தலைவர்கள் கலந்துகொள்ளும் பிரதான பிரசாரக் கூட்டங்கள் இடம்பெறும்.

இதேவேளை ஏப்ரல் 4 ஆம் திகதிகளுத் துறையில் 5 ஆயிரம் ஐ.தே.க. உறுப்பினர்கள் எமது கட்சியுடன் இணைந்து உறுப்புரிமையைப் பெறுகின்றனர்.

இவ்வாறு ஆயிரக்கணக்கானோர் எம்முடன் வந்து இணைந்திருக்கின்றனர். இந்த நிலையில் ஐ.தே.கவின் தலைமைத்துவத்தை மாற்றும் பொருட்டு அக்கட்சிக்குள் பெரும் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

அக்கட்சியின் தலைவர் ரணிலுக்கு ஆதரவாக ஒரு குழுவும் எதிராக ஒரு குழுவுமாக அக்கட்சி இரண்டாகப் பிளவுபட்டுள்ளது. இந்தப் பிளவுக்கான காரணம் ஜனாதிபதிதான் என்று ஐ.தே.க. எம்பிக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

வஜிர அபேயவர்த்தனவைப் பயன்படுத்தி ஐ.தே.கவைப் பிளவுபடுத்த ஜனாதிபதி முயற்சி செய்கிறார் என்று ஐ.தே.கவின் எம்பிக்கள் குழு குற்றஞ்சாட்டுகின்றது.

அதேபோல் ருக்மன் சேனாநாயக்கவைப் பயன்படுத்தி அக்கட்சியில் பிளவுபடுத்த ஜனாதிபதி முயற்சிக்கின்றார் என்று இன்னொரு எம்பிக்கள் குழு குற்றஞ்சாட்டுகின்றது. இதில் எதுவும் உண்மையில்லை.

புலிகளை பலவீனப்படுத்தும் நடவடிக்கையில் த்தான் ஜனாதிபதி ஈடுபட்டுள்ளார். ஐ.தே.கவைப் பிளவுப்படுத்தும் நடவடிக்கையில் அல்ல.

ஜனாதிபதி எந்த அரசியல் கட்சியுடனும் பகைமையுடன் செயற்படவில்லை - ஆகவே, ஜனாதிபதி மீது சுமத்திவரும் குற்றச்சாட்டை நாம் கடுமையாக எதிர்கின்றோம் - என்றார். (சி)

## விழிப்புணர்வுச் செயற்பாடு

வண்ணை, மார்ச் 26

சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துமான பணியகத்தால் அச்சுவேலி, செல்வநாயகபுரம் கிராமத்தைச் சேர்ந்த சிறார்களுக்கு சமாதானக் கல்வி விழிப்புணர்வுச் செயற்பாடு நாளை மறுதினம் சனிக்கிழமை நடத்தப்படவுள்ளது.

நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை இச்செயற்பாட்டு நிகழ்வுகளை பணியக செயற்திட்ட இணைப்பாளர் செல்வி யோ.சோபனா நடத்தவுள்ளார். (203-160)



சுன்னாகம் றோட்டறக்ட் கழகத்தினர் டெங்கு ஒழிப்பு பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் ஒரு கட்டமாக றோட்டறக்ட் கழக அங்கத்தவர்கள் சுன்னாகம் பஸ்தரிப்பு நிலையத்தில் விழிப்புணர்வு தூண்டும் பிரசுரங்கள் வழங்கியபோது எடுக்கப்பட்ட படங்கள்.

(படங்கள்: நேசன்)

## தவக்காலச் சிந்தனை



### பழிக்கு பழிவாங்கும் பகைமை உணர்வு மாறவேண்டும்

கண்ணுக்கு கண் பல்லுக்குப் பல் என பழிவாங்கும் எண்ணம் எமக்குள் இருந்து எங்களை ஊக்குவித்துக் கொண்டு இருக்கின்றது. ஒருவர் மீது பழி சுமத்துவது என்றால் எங்களுக்கு அது ஒரு மகிழ்ச்சியினை ஏற்படுத்தக் கூடிய விடயம் போன்று மாறிவருகின்றது. ஆனால் அவ்வாறு எங்களினால் தண்டிக்கப்பட்டவன் அல்லது தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டவனுடைய பக்கத்தினைப் பார்ப்பது இல்லை. அவனும் என்னை போன்ற ஒரு மனிதன்தான் என்று எண்ணுவது இல்லை. எப்பொழுதும் நாம் செய்கின்ற பிழைகளினை நாம் சரியா? பிழையா? என எண்ணிப் பார்ப்பது இல்லை, பிழைகள் யாவுமே சரிபோன்று காணப்படும். அவ்வாறு பிழையெனத் தெரிகின்ற போதும், அப்பிழையினை சரியென நியாயப்படுத்துவதற்கு மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடுவது போன்ற ஒரு கருத்தையே வைத்திருப்போம்.

இவ்வாறான இப்பழிவாங்கும் எண்ணம் எமக்குள் இருப்பதின் விளைவாகவே, நாட்டில் நிம்மதியில்லை. யுத்தம் என்ற போர்வையின், கண்கொண்டு பார்க்க முடியாத, காது கொடுத்துக் கேட்க முடியாத மிகவும் மோசமான வன்முறைக் கலாசாரம் பரவி வருகின்றது. வீட்டில் நிம்மதி இல்லை. குடும்ப உறவுகளில் விரிசல், அடுத்தவன் பொருளுக்கான ஆசை. அதனைப் பெற்றுக்கொள்வதற்கு அநியாயமான வழிமுறைகளை பின்பற்றுவது போன்ற் மிகவும் மோசமான செயல்முறைகளில் ஈடுபட்டு ஒரு வன்முறைச் சமுதாயத்தினை உருவாக்கி வருகின்றோம்.

நாளும் செய்திகளிலும், செய்தித் தாள்களிலும் கடத்தல்களும், காணாமல் போதல்களும், காரணம் இல்லா கைதுகளும் வழமையாகிவிட்டன. இதற்கு பழிவாங்கும் எண்ணமும், தப்பான தீர்பிடலுமே, காரணமாகின்றது. அவனை இழந்து அவனுடைய உறவுகள், எப்படித் துடிதுடிப்பார்கள் என்று எண்ணிப்பார்த்தீர்களா? எனவே, கிறிஸ்தவர்களாகிய எமக்கு இந்த தவக்காலம் ஒரு மனமாற்றத்தின் காலம், இந்த காலத்தில் எங்ளுடைய பழைய பாவ வாழ்க்கையினை களைந்து ஒரு புது மனிதனாகி வாழ எங்களிடம் இருக்கின்ற கல்லான இதயத்தினை தர இத்தவக்காலத்தில் நாம் அனைவரும் வேண்டுவோமாக.

என்.நிலோஜன் (சுண்டி)

## விளக்குகிறார் பாபா

விஷ்ணு - சத்வ குணத்தைக் குறிக்கிறது.

பிரம்மா - ராஜஸ (படபடப்பு) போன்ற குணத்தைக் காட்டுகிறது.

மஹேஸ்வர - தாமஸம் - சோம்பல் தூக்கம் மந்தத்தன்மை இவற்றைக் குறிக்கிறது.

சிவன் - ஒவ்வொருவரிடமும் அர்த்தநாரீஸ்வரன் வடிவத்தில் இருக்கிறார்.

அவரது கண்கள் சிறிதளவு திறந்து இருக்கின்றன. கண்கள் முழுமையாகத் திறந்திருந்தால், அது உலகத்துக்கு அழிவை ஏற்படுத்தும். கண்கள் மூடியிருந்தால் தூக்கம் ஏற்படும். ஆகவே மூக்கு நுனியில் கவனத்தைச் செலுத்தி, கண்கள் பாதி திறந்திருக்கின்றன.

ஈஸ்வரனின் பல படங்களில் அவர் பத்மாஸனத்தில் அமர்ந்து, கண்கள் பாதி திறந்தவாறு, மூக்கு நுனியில் கவனத்தைச் செலுத்தி, தியான நிலையில் அமர்ந்திருப்பதாகச் சித்திரிக்கப்பட்டிருக்கிறார். தியானத்தில் இதுவே சரியான ஆஸன நிலை.

சிவன் தலையில் சந்திரன் வீற்றிருக்கிறது, கங்கை நதி காதுகள் வழியாக ஓடுகிறது. பாம்புகள் கைகளில் வளையல்கள் போல சுற்றிக்கொண்டுள்ளன. இவ்வாறு, அவர் வருணிக்கப்படுகிறார். குணங்குறியற்ற வடிவத்தையும் அவர் ஏற்றுக் கொண்டிருக்கிறார். லிங்க வடிவத்தில் அவர் இருக்கிறார். உன்னை இலட்சியத்துக்கு இட்டுச் செல்லும் சின்னமே லிங்கம்.

விஷ்ணு, பராமரிப்பவர். 'மனிதன் பக்தி வழியில் பல துன்பங்களை எதிர்கொள்கிறான். இந்தத் துன்பங்களை வெற்றி கொள்ள விஷ்ணு உதவி செய்வதுடன் கூட, இலட்சியத்துக்கும் உன்னை பத்திரமாக இட்டுச் செல்கிறார்.

பிரம்மா, விஷ்ணு, சிவன் மூவரும் எங்கும் நிறைந்தவர். அவர்கள் எங்கும் உள்ளவர். அவர் காலத்தையும், குணத்தையும் கடந்தவர்கள். விஷ்ணுவிடம் உள்ள சங்கம், ஒலியைக் குறிக்கிறது. சக்கரம், காலச்சக்கரத்தைக் குறிக்கிறது..காலமும் ஒலியும் இறைவனின் ஆதிக்கத்தில் உள்ளவை.

ஒலி, கொப்பூழியிலிருந்து வெளிவருகிறது. ஆகவே, ஆதிஒலி (ஓம்காரம்) யைக் குறிக்கும் பிரம்மா விஷ்ணுவின் கொப்பூழி (Navel) லிருந்து பிறந்ததாகக் கூறப்படுகிறது. மௌனம், ஈசுவரனாகும். ஆகவேதான் நீங்கள் ஈசுவரன் தியான நிலையில், உட்கார்ந்திருப்பதைக் காண்கிறீர்கள்.

இறைவனின் மூன்று வேறுபாடான அம்சங்களின் ஒருமையைப் புரிந்து கொள்ள வேண்டும். ஒலி, காலம், ஆற்றல் (சக்தி) மூன்றும் இறைவனின் ஆதிக்கத்தில் உள்ளன. சிவன் த்ரி நேர்தா (மூன்று கண்ணுடையவர்), த்ரிசூலர் (மூன்று சூலங்களுடையவர்) த்ரிகுணாதீதர் (முக்குணங்களையும் கடந்தவர்) என்று வருணிக்கப்படுகிறார். இவற்றிற்கு உட்பொருளும் சிறப்பும் உண்டு. மனிதனுக்கு இரண்டு கண்கள் உள்ளன. ஆனால் சிவனுக்கு மூன்று கண்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. அதாவது மனிதன் இறந்த காலம், நிகழ்காலம் இவற்றை மட்டும் அறிவான். ஆனால் ஈசுவரன் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் அனைத்தையும் அறிவார். சிவனுக்கு நெற்றியில் மூன்றாவது கண் உண்டு என்பது பொருளல்ல. இது மக்களின் ஒரு செயற்கையான கற்பனை.



சாயி சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்குப் புதிய பயிலுநர்கள் தெரிவு செய்யப்பட்டோரின் விவரங்கள் வருமாறு

யாழ்ப்பாணம்,மார்ச்26

தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு 2009ஆம் ஆண்டுக்கு புதிய பயிலுநர்களைத் தெரிவுசெய்வதற்கான நேர்முகத்தேர்வு எதிர் வரும் 8ஆம் திகதி தொடக்கம் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள் ளது என்று பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தெரிவித்துள்ளார்.

கணிதம் (ஆங்கிலம்), நடனம், சித்திரம், சங்கீதம், நாடகமும் அரங்கியலும், சமூக விஞ்ஞானம், தொழில்நுட்பக் கற்கை ஆகிய பாடத்துறைகளுக்கு அழைக்கப்பட்டோர் விவரம் கடந்த 24.03.2009ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் வெளியாகியிருந்தது.

சித்திரம், முதன்மொழி, மனைப்பொருளியல், ஆரம்பக்கல்வி ஆகியப் பாடத்துறைகளுக்கு அழைக்கப்பட்டோரின் விவரம் வருமாறு:

**சித்திரம்**

எஸ்.வாகீசன் (இணுவில் கிழக்கு), கே.பிரகாஸ் (நீர்வேலி மேற்கு), எஸ்.சிந்துஜா (உடுவில்), வி.நதியா (அச்சுவேலி தெற்கு), கே.தபேந்திரன் (மிருசுவில்), எஸ்.சோபனராஜ் (மானிப்பாய்), எஸ்.ஜங்கரன் (உடுவில் கிழக்கு), கே.யாழ்வேந்தன் (அச்சுவேலி), பி.நிசாந்தன் (புங்குடுதீவு), எஸ்.நிசாந்த் (புத்தூர் வடக்கு), எம்.கிருபாசேனன் (இணுவில் கிழக்கு), எஸ்.பிரதீபன் (நல்லூர் வடக்கு), வி.விஜிதரன் (இணுவில் கிழக்கு), எஸ்.கஜேந்தன் (மானிப்பாய்), ஏ.விஜீந்திரன் (சுழிபுரம்), ஏ.கெங்காகரன் (சாவகச்சேரி).

**முதலாம் மொழி**

எஸ்.வாகீசன் (இணுவில் கிழக்கு), எஸ்.சோபனா (உடுவில்), என்.சத்தியா (கொடிகாமம்), எம்.அமிர்தா (சங்குவேலி தெற்கு), பி.தர்சினி (சில்லாலை மேற்கு), வி.விநாயகமூர்த்தி (துன்னாலை மத்தி), பி.சித்திகா (ஆனைக்கோட்டை), ரி. கோகுல்ராம் (கந்தர்மடம்), ரி.தாரணி (வியாபாரிமூலை), பி.சூரிகலா (திருநெல்வேலி கிழக்கு), எஸ்.மயூர் (இமையாணன் கிழக்கு), ரி.கலைச்செல்வி (ஆனைக்கோட்டை), வை.கர்சினி (கொடிகாமம்), எஸ்.ஜீவிதா (வண்ணார்பண்ணை மேற்கு), என்.விஜயரட்ணம் (புலோலி மேற்கு), வி.ரஜிந்தன் (வேலணை கிழக்கு), எஸ்.சுபதீஸ் (மீசாலை வடக்கு), என்.அனுயா (சுழிபுரம் வடக்கு), வி.கேமினி (சுன்னாகம்), ஏ.கஜனி (சாவகச்சேரி),

பி.மயூரன் (சுதுமலை தெற்கு), எஸ்.நிலானி (மீசாலை மேற்கு), வி.சதாசிவம் (காரைநகர்), ஆர்.நிலக்ஷனா (உரும்பிராய் வடக்கு), ரி.ஞானகிரி (கோண்டாவில் மேற்கு), பி.சுகந்தி (பொலிகண்டி), எம்.சங்கீதா (மாதகல்), என்.சசிகரன் (தெல்லிப்பழை கிழக்கு), எஸ்.ரூபினி (புலோலி மத்தி), பி.அனுஷிகா (திருநெல்வேலி), எஸ்.சிறிலதா (கொழும்பு - 06), ரி.சுகிர்தா (நெடுந்தீவு), எம்.ஏ.வினோராஜ் (மன்னார்), பி.கரிகாலன் (கோண்டாவில் மேற்கு), ரி.பிறின்சியா (அச்சுவேலி தெற்கு), எஸ்.பிறேமலதா (கோண்டாவில் மேற்கு).

**மனைப்பொருளியல்**

எஸ்.ரேணுகா (நுணாவில் மேற்கு), ரி.சங்கீதா (இணுவில் கிழக்கு), ஏ.யாழினி (யாழ்ப்பாணம்), கே.ரோகினி (அச்சுவேலி), பி.யோகினா (நுணாவில் கிழக்கு), வி.அனித்தா (வல்வெட்டித்துறை), எஸ்.சஜிதரா (அரியாலை), எம்.சோபிகா (கரம்பொன் கிழக்கு), எஸ்.கஜேந்தினி (அராலி வடக்கு), கே.நிக்ஷா (கொக்குவில் கிழக்கு), ஐ.குகேந்திரன் (மாகியம்பிட்டி),

ஆர்.நிஷா (இணுவில் கிழக்கு), என்.சர்மிளா (புத்தூர் மேற்கு), கே.இரட்ணசபாபதி சர்மா (புலோலி தெற்கு), ரி.கஜேந்திரரஜனி (பிரான்பற்று), எம்.கோமளா (உடுப்பிட்டி), எஸ்.லாவண்யா (மானிப்பாய்), ஆர்.சத்தியஜெயந்தி (ஆனைக்கோட்டை), எல்.நல்லதம்பி (இளவாலை வடக்கு), ஜே.மேனகா (சுன்னாகம் கிழக்கு), ஏ.விஜேந்தி (சாவகச்சேரி), கே.பாமினி (அளவெட்டி), ஜே.ஜோன் கில்பேட் (ஊர்காவற்றுறை), பி.கலைவாணி (கந்தரோடை), எஸ்.கௌசல்யாதேவி (புலோலி மத்தி), எஸ்.பிரதீபா (சண்டிலிப்பாய் கிழக்கு), ஜி.றொசானி (சண்டிலிப்பாய்), எஸ்.அனுயா (கோப்பாய் மத்தி), கே.கமலச்செல்வி (நுணாவில் மேற்கு), எஸ்.தஷியா (சண்டிலிப்பாய்), ஈ.ரூபினி (ஊர்காவற்றுறை), ரி.விக்னேஸ்வரி (உடுப்பிட்டி), எஸ்.நளினி (அராலி தெற்கு), என்.மேகலை (புலோலி கிழக்கு), எஸ்.பவானி (தும்பளை), ஆர்.வாசுகி (அச்செழு தெற்கு), டி.சற்குணராஜ் (இராசாவின் தோட்டம்), ஆர்.அகல்யா (தும்பளை), ஏ.கலைவாணி (ஏழாலை தெற்கு), ஆர்.கயல்விழி (புலோலி தெற்கு), எஸ்.விஜிதா (சுன்னாகம்), வி.அபிராமி (அராலி மேற்கு), ஜே.ஜி.ஏ.நிரோசா (சில்லாலை வடக்கு), எச்.ஜி.அகிர்தா (யாழ்ப்பாணம்), கே.தயாளினி (அராலி மத்தி), எஸ்.ஜெயசொரூபி (சண்டிலிப்பாய் வடக்கு), சி.மஜீபன் (கந்தரோடை), ரி.கலைச்செல்வி (பருத்தித்துறை), எஸ்.பிரதாஸ் (உரும்பிராய்), ஐ.சிவரூபதர்சினி (அராலி தெற்கு).

**ஆரம்பக்கல்வி**

ஏ.சோபனா (உடுவில்), ஜே.ரி.மேரி நிலோஜினி (முள்ளியன்), என்.சத்தியா (மந்துவில் வடக்கு), எம்.அமிர்தா (சங்குவேலி தெற்கு), வி.தர்சினி (சில்லாலை மேற்கு), வி.விநாயகமூர்த்தி (துன்னாலை மத்தி), பி.சித்திகா (ஆனைக்கோட்டை), ரி.தாரணி (வியாபாரிமூலை), பி.சூரிகலா (திருநெல்வேலி கிழக்கு), எஸ்.மயூர் (இமையாணன் கிழக்கு), வை.கர்சினி (கொடிகாமம்), எஸ்.ஜீவிதா (வண்ணார்பண்ணை மேற்கு), எஸ்.பாலரமணம் (மானிப்பாய் வடக்கு), வி.சுபித்திரா (சுழிபுரம்), என்.விஜயரட்ணம் (புலோலி மேற்கு), வி.ரஜிந்தன் (வேலணை கிழக்கு), எஸ்.சுபதீஸ் (மீசாலை வடக்கு), வி.கேமினி (கந்தரோடை மேற்கு), ஏ.கஜனி (சாவகச்சேரி), பி.மயூரன் (சுதுமலை தெற்கு), எஸ்.நிலானி (மீசாலை மேற்கு), வி.சதாசிவம் (காரைநகர்), ஆர்.நிலக்ஷனா (உரும்பிராய் வடக்கு), ரி.ஞானகிரி (கோண்டாவில் மேற்கு), வி.லிமா (அல்வாய் கிழக்கு), ரி.சுரேகா (நாவற்குழி கைதடி), பி.சுகந்தி (வல்வெட்டித்துறை), எம்.சங்கீதா (மாதகல்), எஸ்.ரூபினி (புலோலி மத்தி), என்.சசிகரன் (தெல்லிப்பழை கிழக்கு), பி.அனுஷிகா (திருநெல்வேலி), எஸ்.சிவராமலிங்கம் (வதிரி), ரி.சுகிர்தா (நெடுந்தீவு தெற்கு), பி.கரிகாலன் (கோண்டாவில் மேற்கு), எஸ்.சுதர்சனா (அரியாலை), ரி.பிறின்சியா (அச்சுவேலி தெற்கு), எஸ்.மாலதி (வல்வெட்டித்துறை), எஸ்.பிறேமலதா (கோண்டாவில் மேற்கு), ரி.அனுஷியா (குடத்தனை), எஸ்.நவரட்ணம் (மானிப்பாய்), கே.கவாஸ்கர் (ஏழாலை), பி.நடராஜ் (அல்வாய்), கே.சுதர்ஜினி (சண்டிலிப்பாய்), ஆர்.கோபினி (இராசாவின் தோட்டம்), எஸ்.சிவநந்தினி (கரணவாய் கிழக்கு), எம்.திவாணா (றம்பைக்குளம், வவுனியா), எஸ்.கோகுல் (நாவற்குழி தெற்கு), பி.மயூரதி (யாழ்ப்பாணம்), ஏ.ரி.டி.ருக்ஷி (யாழ்ப்பாணம்), எஸ்.துஷியந்தன் (அனலைதீவு), ரி.பகீரதி (இளவாலை), எஸ்.வசந்ததாசன் (ஆனைக்கோட்டை), வி.நளினா (புலோலி மேற்கு), கே.சர்மினி (வட்டுக்கோட்டை), பி.பிரசாத் (நல்லூர்), எஸ்.ஏ.சோபியா (கீரிமலை), ரி.தாரணி (அரியாலை), ரி.அனுரேகா (கோண்டாவில்), ஏ.அருமைநாயகம் (அரியாலை).

(தொடரும்)


## விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
அல்பிறட் நீத்மலர்
(புஸ்பம்)

பிறந்தது 22*08*1937

பிரிந்தது 26*03*2008

எம்மைத் தவிக்கவிட்டுச் சென்ற அம்மாவே
நேற்றுவரை பக்கத்திலிருந்த உங்களை
இன்றோடு இதயத்திலிருத்தி விட்டு - நாம்
இருளில் தத்தளிக்கின்றோம்
உங்கள் நினைவுகள் எங்கள்
மனங்களில் என்றும் நின்று நிழலாடும்.

334, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (83744)

உங்கள் நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.


## கர்ப்பிணித் தாய்மாருக்கு இலவச மதிய உணவு

குருநகர்,மார்ச் 26

வேலணைப் பிரிவு வைத்தியசாலையில் கிசிச்சைபெற்று வரும் கர்ப்பிணித் தாய்மாருக்கு மாதந்தோறும் இடம்பெற்று வரும் 'கிளினிக்'கின் போது சாட்டிப் பங்குத் தந்தையின் நிதி உதவி மூலம் மதிய உணவு இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது என்று வேலணைப் பிரிவு வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஆ.திருநாவுக்கரசு தெரிவித்தார்.

இந்த வைத்தியசாலையில் குழந்தையைப் பிரசவிக்கும் தாய்மாருக்கான சீருடைகளும் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (203-51)

## மகளிர் தின விழா

நல்லூர்,மார்ச்26

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் மகளிர்தின விழா 2009 எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு திருநெல்வேலி கருணாலயம் சிறுவர் இல்லத்தில் நடைபெறும்.

நல்லூர் உதவி பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரம் தலைமையில் நடைபெறும். மேற்படி விழாவில் பிரதம விருந்தினராக நல்லூர்ப் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனனும் சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி என்.ஏ.ஜெயராஜன், 'ஜெசாக்' நிறுவன இணைப்பாளர் ந.சுகிர்தராஜ் ஆகியோரும் கலந்துகொள்வர்.

கலைநிகழ்வுகள், சான்றிதழ் வழங்கும் வைபவங்கள் என்பனவும் இடம்பெறும்.(203-111)


## 4ஆம் மாத நினைவஞ்சலியும் 46ஆவது பிறந்த தின நினைவும்



திருமதி
சாந்தி ஜெயசீலன்

தோற்றம் 26*03*1963

மறைவு 26*11*2008

மாதங்கள் நகர்ந்தாலும் நீங்காத்துயர்
தன்னில் நீந்துகின்றோம்
எம்மைப் பேணி கடமைதனை ஆற்றி
மறைந்துவிட்ட
உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

தாய், கணவர், பிள்ளைகள்,
சகோதரர்கள் மற்றும்
திரு.திருமதி நவரத்தினம் வசந்தி.
பழைய வீதி, கோப்பாய். (83745)



## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



அமரர் துரைராசா
பாஸ்கரன் (மைனா)

திதி:
மண் மகிழ 26.03.2009 மனம் நெகிழ

17.01.1983 18.03.2007

ஆயிரம் உறவுகள் இருந்தென்ன எம் மகளுக்கு
அப்பா என்றழைக்க நீர் இல்லையே!
எங்கு சென்றீர் எம் தெய்வமே!
மனித வாழ்வு மாயம் ஆயினும்
காலனவன் கதியால் மரணம் சொற்ப வாழ்வில்
உமைப் பிரித்ததுவோ
நினைக்கவே கனக்கிறது நெஞ்சம்.

இன்று (26.03.2009) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ந.புண்ணியமூர்த்தி (இ.மி.ச.),
புங்கன்குளம் வீதி,
அரியாலை. (83603)



## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 20 02 1947

மறைவு 26 03 1999

திருமதி
அனற்றா இம்மனுவல்

அன்பு மனைவியாக ஆவியுள்ளவரை
பண்புடன் நடந்து கொண்டீர்
பாச நேசமுடன் அனைவரையும்
ஆசைமுகம் காட்டி அணைத்துக் கொண்டீர்

அருமை அன்னையாகப் பாரெல்லாம்
பெருமை பெற வளர்த்துவிட்டீர்
அம்மா என்ற சொல்லிற்கு இலக்கணமானவளே
சுகந்த நறுமணமாய் உம் நினைவு இன்னும் கமழ்கிறது

இனிநாம் உங்களை என்று காண்பதுவோ
இதயம் பதைக்குதம்மா நினதடிதேடி
பாவம் போக்கிடவே பாருக்கு வந்த தெய்வம்
பாதம் சேர்ந்திடவே பத்தாம் ஆண்டு நிறைவுதன்னில்.

உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

சில்லாலை வடக்கு,
பண்டத்தரிப்பு.

கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(சி/557634)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வாரம் வரலாற்றில்

**மார்ச் - 20**



உலகப் புகழ்பெற்ற விஞ்ஞான மேதையான சேர் ஐசாக் நியூட்டன் 1727ஆம் ஆண்டு மார்ச் 20ஆம் திகதி இறந்தார்.

**மார்ச் - 21**

தென்னாபிரிக்காவில் இனப்பிரச்சினை தலைவிரித்தாடிய போது 'ஷார்ப் வில்லி' என்னுமிடத்தில் நிகழ்ந்த படுகொலைகள் வரலாற்றில் முக்கியமானதாகக் கொள்ளப்படுகின்றது. இது நிகழ்ந்தது 1960ஆம் ஆண்டு மார்ச் 21ஆம் திகதி.



**மார்ச் - 22**



பின்லாந்து நாட்டைச் சேர்ந்த ஓவியரான அன்ரனி வோன் ரைக் 1599ஆம் ஆண்டு மார்ச் 22ஆம் திகதி பிறந்தார்.

**மார்ச் - 23**

1951ஆம் ஆண்டு மார்ச் 23ஆம் திகதி பாகிஸ்தான் இஸ்லாமியக் குடியரசு நாடாகப் பிரகடனம் செய்யப் பட்டது.



**மார்ச் - 24**



கணீரென்ற குரலால் கேட்போரை மயக்கும் இசையாற்றல் கொண்ட பாடகரான சீர்காழி கோவிந்தராஜன் 1988ஆம் ஆண்டு மார்ச் 24ஆம் திகதி காலமானார்.

**மார்ச் - 25**

இங்கிலாந்தை ஒரு வல்லரசு நாடாக உருவாக்குவதில் பெரும்பங்கு வகித்த மன்னனான இரண்டாம் ஹென்றி 1133ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25ஆம் திகதி பிறந்தார்.



**மார்ச் - 26**



அமெரிக்காவின் புகழ்பூத்த நாடகாசிரியரான டென்னசி வில்லியம்ஸ் என்பவர் 1911ஆம் ஆண்டு மார்ச் 26இல் தான் பிறந்தார்.

# காசமுற்றோர்க்கு...

Dr.சி.யமுனானந்தா
காசநோய் கட்டுப்பாட்டு அதிகார
மார்புநோய் சிகிச்சை நிலையம்,
யாழ்ப்பாணம்.

இரைதேடும் காசக் கிருமிகளினால்
இரையாகும் நுரையீரல் அதனால்
திரைபோடும் வாழ்விற்கு
வரையிடுவோம் சிகிச்சையினை
விரைவாகும் நலத்திற்கு
கரை காண்போம்

மூன்றிற்கு மேற்கிழமைகள் இருமல்
மூன்றிற்கும் மேல் மணிக்குக் காய்ச்சல்
உடல் குன்றல் சளியுடன் உதிரம்
நாட்டம் குன்றல் உணவில் இவையே காசஅறிகுறிகள்

வதியும் இடங்களில் நெருக்கம்
புசிக்கும் உணவில் போசணையின்மை
பதியில் நோயுடன் வாழல்
கதியில் காசம் பரவ ஏது

தொழில் இடத்தில் இருமின் உடல்குன்றின்
எழில் மிக்கதே சிகிச்சை நோய்காண்மின்
பொழில் சேர் சோலையில் வாழ்வு போல்
யாழில் காசநோயுற்றோர் வாழ்வு

அச்சம் வேண்டாம் நோய் உண்டென
துச்சம் வேண்டாம் மருந்தினை உண்டிட
மிச்சம் இன்றி அழியும் காசக்கிருமிகள்
பச்சம் மிக்க உறவுகள் நிலைத்திடுமே

தளிரும் நலத்திலே மகிழும் மனம்
மிளிரும் சேவையிலே அகலும் துன்பம்
ஒளிரும் எதிர்காலம் காசமுற்றோர்க்கு
பளிரும் புன்னகையே காசமுற்றோர்க்கு.

# நற்பண்புகளை வளர்க்கும் நடனக் கலை

உ.உமாமகேஸ்வரி,
மானிப்பாய்.

மனிதன் மனிதனாக வாழவேண்டும் விலங்கு வாழ்க்கையிலும் உயர்வான மேம்பாடுமிக்க வாழ்க்கையை மனிதன் நடத்துவதற்கு நற்பண்புகளைக் கடைப்பிடித்தல் இன்றியமையாதது. மனித வாழ்க்கையை மேம்பாடானது எனக் கருதுவதற்கு உதவும் பெறுமதி மிக்க வாழ்க்கைப் பண்புகளே மனித விழுமியங்கள் எனப்படுகின்றன. நாம் எமது வாழ்வில் பேணி வளர்க்கவேண்டிய உயர்ந்த பண்புகள் பல உள்ளன. மனிதன் தான் குழந்தையாகப் பிறக்கும்போது ஏதும் அறியாதவனாக இருந்து வளரவளர அறிவு வளர்ச்சியின் விளைவாகக் குற்றங்களும் புரியத் தொடங்குகின்றான். சுயநலம், கபடம், வஞ்சகம், ஏமாற்றம், சினம், பொய், சூது, காமம், குரோதம் போன்ற பல தீய குணங்களுடன் வளர்கிறான். இதையே அருணகிரிநாதர்,

கருவிலுருவாகி வந்து வயதளவிலே வளர்ந்து
கலைகள் பலவும் தெரிந்துமதனாலே
கரியகுழல் மாதர் தங்கள் அடிச்சுவடு மார்புதைத்து
கவலை பெரிதாகி நொந்து மிகவாடி

என்று மனிதன் போக்கைக் குறிப்பிடுகின்றார். இத்தகைய சீர்குலைவான செயற்பாடுகளிலிருந்து மீட்சி பெறுவதற்கும், தொடர்ந்து நற்பண்புகளைப் பேணுவதற்கும் இறைவனின் திருவடிகளே ஏற்ற இடம். இத்தகைய இறைவனது திருவடிகளுக்கு ஒப்பானது ஒப்பற்ற நாட்டியக் கலையே. இந்நாட்டியக் கலையினைப் பயின்று மேன்மையடைய வேண்டும் என்பதே எம் அவாவாகும். நாட்டியக் கலை ஆழமான கலாசார பாரம்பரியங்களுடன் வளர்க்கப்பட்டுள்ளது. மரபு வழிக்கலையாக விளங்கும் இந்நடனக் கலை அவ்வவ்பிராந்திய மக்களின் பண்பாடுகளை விளக்குவதாகவும் ஏனைய கலாசார மக்களிடம் தொடர்பு கொள்ளும் ஊடகமாகவும் திகழ்கிறது.

கலையும், கலாசாரமும் ஓர் இனத்தின் அடையாளமாக விளங்குகின்றன. மனித நாகரீக வளர்ச்சியில் கலைகளும் ஓர் அங்கம் வகிக்கின்றன. அவை பல்வேறு உணர்வுகளையும் சமய தத்துவக் கருத்துக்களையும் விளக்கவல்லது. பண்டிதரும், பாமரரும் பார்த்துப் பயன்படத்தக்கன. உயர்ந்தோர், தாழ்ந்தோர், ஏழை, பணக்காரர் முதலிய சமூக ஏற்றத்தாழ்வுகளையும், வேறுபாடுகளையும் கடந்து எவரும் கண்டுகளிக்கத்தக்கது. ஆடற்கலையும், சமூகமும் இணைந்து இருநிலைத் தன்மையை உருவாக்குகின்றன. ஆ[illegible] கலை சமூகத்திற்குத் தேவையான பல நன்மையான விடயங்களை[illegible]ங்க, சமூகம் ஆடற்கலைக்குரிய பல கருத்துக்களையும், வ[illegible]டுதல்களையும் வழங்குகின்றது.

[தொடரும்...]

# பிரபஞ்சத் தேவதைகள்

ஜே.எஸ்.ராஜ்,
யாழ்.பல்கலைக்கழகம்.

வன்முறைகள்
வாழ்வில் வசதிபடைத்து
வசந்தம் தொலைந்து
மனமும் காய்ந்துபோனது...

உயிரில்
உரிமைப் பட்டயமாய்
சோகங்கள் நிறைந்து
விழிநீரும் வற்றிவிட்டது...

சங்ககால
சிறைவாசம் இங்கு
தொடர்கதையாகியது
சரித்திரமே ஏக்கமானது...

சீதனம்
இங்கு வலிகளானது
பிணங்களுடன் குடும்பம் சங்கமிக்கிறது...

உணர்வுகள்
சடப்பொருளாகி ஊனமானது
தனிமையே இங்கு பொழுது போக்கானது...

பெண்ணினம்
அடக்கப்பட்டு சிந்தனைகள் சிறகறுந்தது
சமவுரிமை தொண்டைக்குழியுடன் விவாகரத்தானது...

நாம்
சாவதற்கு முன்னராவது
அனுமதி கொடுங்கள் சுதந்திரமாகப் பேசுவதற்காவது!

# சிந்தனைக்கு

1. அழகு மிகக்கொண்ட அளகு இரையை அலகால் கொத்திச் சாப்பிட்டது.
2. அலி நிலைமை கொண்ட அளி வெட்கம் தாங்காது அழிந்தது.
3. ஆளியின் பிளிறலில் நடுங்கிய ஆலி ஆழியில் பொழிந்தது.
4. உளவு பார்க்க உலவிய ஒற்றன் உழவுதலையே கண்டான்.
5. மன்னனை ஒழிக்க வந்த கைக்கூலி ஒலியுடன் கூடிய ஒளியைக் கண்டு திகைத்தான்
6. களகம் பகிர்வதில் ஏற்பட்ட கலகத்தினால் கழகம் பிரிந்தது.
7. குழவியுடன் குலவிய குளவி கொட்டிவிட்டுப் பறந்தது.
8. கூலத்தில் ஒன்றான கூழத்தை புடைத்ததினால் கூளம் எழும்பியது.
9. சூல் தரித்த பெண்ணின் சூளைக் கலைப்பேனென சூழ் செய்த கயவனை நையப்புடைத்தனர்.
10. வாலைப் பருவத்தினள் வாழை மரத்தின் கீழ் இருந்து வாளையை வெட்டிக் கொண்டிருந்தாள்.

"குருநகர் யோகி" (எஸ்.என்.ஜே.மரியாம்பிள்ளை) 645/1, கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.

# கேள்விக்கு என்ன பதில்? -20

ஒரு காட்டில் வசிக்கும் சில குருவிகள் எங்கு சென்றாலும் கூட்டமாகவும் முக்கோணி எண் வடிவிலுமே செல்லும். அவ்வாறு ஒரு முறை இரை தேடிச் செல்கையில் அக்குருவிகளாவன: இறுதியில் வந்த குருவிகளுக்கு, முன்னால் வந்த குருவிகளுக்கு, அதற்கு முன்னால் வந்த குருவிகளுக்குப் பின்னால் வந்த குருவிகளுக்கு அதற்குப் பின்னால் வந்த குருவிகளுக்கு, முன்னால் வந்த குருவிகளின் எண்ணிக்கை நான்கு ஆகும். அவ்வாறாயின் அக்கூட்டத்தில் உள்ள குருவிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

அனுப்பியவர்: எஸ்.கிருஷ்ணப்பிரியா, தாழையடி லேன், திருநெல்வேலி.

*(சரியான விடையை 05.04.2009இற்கு முன்னர் அனுப்பிவைக்கவும்)*

## கேள்விக்கு என்ன பதில் 18இன் சரியான விடை

630 யானைகள்

# இளவல்கள் வட்டம்

YOUTH

## கேள்விக்கு என்ன பதில்? - 18- பரிசு பெறுவோர்

முதலாம் பரிசு - தயாளினி தயாளன், கனகசபை வீதி, மானிப்பாய்.

இரண்டாம் பரிசு - வி.சங்கீதன், ஆர்.டி.எஸ். ஒழுங்கை, மல்லாகம்.

மூன்றாம் பரிசு - ந.சிறிஸ்கந்தராசா, அளவெட்டி மத்தி, அளவெட்டி.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..............................
முகவரி :-..............................
:-..............................
.................... ....................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி கூறிப் பாராட்டுகின்றோம்



கொழும்புத்துறைப் பிரதேச மக்களின் நலன் கருதி கிராம அபிவிருத்திக்கு உதவியமை மற்றும் கடற்றொழில் கட்டுப்பாடுகளை நீக்கியமை சிறு கைத்தொழிலான தும்புக் கைத்தொழிலை மேலும் மேம்படுத்த உதவியமைக்காக கௌரவ சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு.டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும் எமது பிரதேச அமைப்பாளர் தோழர் நீகன் அவர்களுக்கும் எமது உளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நன்றியுடன்

**கொழும்புத்துறை வாழ் மக்கள்.**

## கேள்வி அறிவித்தல் - இல.04

### கட்டடங்கள் திணைக்களம் வடக்கு மாகாணம், யாழ்ப்பாணம்

01. தலைவர், மாவட்ட கொள்ளல் குழு, அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம். அவர்களால் தகுதிவாய்ந்த சகல கேள்விதாரர் களிடமிருந்தும் கீழ்வரும் வேலைகளுக்கான மூடிய கேள்விகள் 30.04.2009 பி.ப. 3 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

| தொ இல. | ஒப்பந்த குறியீட்டு இல. | ஒப்பந்த வேலை விவரம் | இக்ராட் தரம் | கேள்வி பிணை | மீளளிக்கப் படாத கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01. | JF/BD/GA/HS/05/2009 | மகப்பேற்று விடுதி நிர்மாணித்தல் மானிப்பாய் பிரதேச வைத்தியசாலை, கட்டம் - I | M6/C7 | 108,300.00 | 1000.00 |
| 02. | JF/BD/GA/HS/06/2009 | வைத்திய அதிகாரி விடுதி நிர்மாணித்தல், காரைநகர். | M6/C7 | 93.500.00 | 1000.00 |
| 03. | JF/BD/GA/HS/07/2009 | ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவு நிர்மாணித்தல், இளவாலை. | M6/C7 | 88,600.00 | 1000.00 |
| 04. | JF/BD/GA/HS/08/2009 | கிராமோதய சுகாதார நிலையம் பூரணப்படுத்தல், அத்தியடி, பருத்தித்துறை. | M7/C8 | 49,200.00 | 1000.00 |

02. கேள்வி அறிவித்தல் தொடர்பில் பின்வரும் தகைமைகளை சகல கேள்விதாரர்களும் கொண்டிருக்க வேண்டும்.

I. மேற் கூறிய அட்டவணையின் பிரகாரம் குறிப்பிடப்பட்ட ICTAD தரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

II. ICTAD அறிவுறுத்தலுக்கமைய மேற்படி வேலை தொடர்பில் போதிய கேள்வி தகவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

III. முன்னைய வேலைகளில் மோசமான, நேர்மையற்ற வெளிப்படுத்தல்களைக் கொண்டிருத்தல் கூடாது.

IV. ஒப்பந்தகாரர் புதுப்பித்த தகவுப் பதிவுப் புத்தகத்தை கேள்வி ஆவணங்கள் பெற முன்னர் ஒப்படைக்க வேண்டும்.

V. கேள்விதாரர் VAT பதிவு செய்ததன் பிரதியையோ அல்லது VAT பதிவு செய்யப் படாமைக்கான கடிதத்தையோ ஆணையாளர், உள்நாட்டு இறைவரி திணைக்களத்தால் உறுதிப் படுத்தி சமர்ப்பிக்க வேண்டும்.

03. ஆர்வமுள்ள கேள்விதாரர் மேலதிக விவரங்களையும், கேள்வி ஆவணங்களையும் இலவசமாக அலுவலக நேரத்தில் நிறைவேற்றுப் பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம் (வ.மா) யாழ்ப்பாணத்தில் தொடர்புகொண்டு (தொ.இல. 021-222 2634) பரிசீலிக்க முடியும்.

04. கேள்வி ஆவணங்களை 30.03.2009 தொடக்கம் 24.04.2009 பி.ப. 3 மணிவரையும் மீளளிக்கப்படாத கட்டணம் (அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு) பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம் (வ.மா.), யாழ்ப்பாணத்தில் செலுத்தி நிறைவேற்றுப் பொறியியலாளரிடமிருந்து அலுவல்க நாள்களில் பெற்றுக் கொள்ளலாம்.

05. இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்ட பொறி வைக்கப்பட்ட கேள்விகள் உரிய கேள்விப்பிணையுடன் தலைவர், மாவட்ட கொள்ளல் குழு, மாவட்ட செயல்கம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 30.04.2009 பிற்பகல் 3 மணிக்கு முன்பாக அனுப்பி வைக்க வேண்டும். கேள்வியின் இடதுபக்க மேல்மூலையில் வேலையின் விவரம் குறிப்பிடப்பட வேண்டும். உடனடியாக கேள்வி திறக்கப்படும். இந்நேரம் ஒப்பந்தகாரரோ அல்லது அவர் சார்பில் உரித்தளிக்கப்பட்டவரோ சமுகமளிக்க முடியும்.

06. மேற்படி கேள்வி தயாரித்தல், அனுப்புதல் தொடர்பில் ஏற்படும் எந்த செலவீனங்களுக்கும் தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

க.கணேஷ்,
தலைவர்,
மாவட்ட கொள்ளல் குழு/அரசாங்க அதிபர்/
மாவட்ட செயலாளர், யாழ்ப்பாணம்.

பிரதம பொறியியலாளர் அலுவலகம்,
கட்டடங்கள் திணைக்களம், (வ.மா),
யாழ்ப்பாணம்.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹா

## திருமண அழைப்பு

நிகழும் சுபமங்களகர சர்வதாரி வருஷம் பங்குனித் திங்கள் 14ஆம் நாள் 27.03.2009 வெள்ளிக்கிழமை மு.ப. 9.45 மணிமுதல் 10.15 மணிவரையுள்ள இடப லக்கினமும், ரேவதி நட்சத்திரமும், அமிர்த சித்த யோகமும் கூடிய சுப வேளையில்.

திரு.திருமதி கிருஷ்ணசாமி பத்மநாதன் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரன் திருநிறைச் செல்வன் **சியாம்ம கிருஷ்ணா (சியாம்)** அவர்களுக்கும்

திரு.திருமதி இரத்தினம் மகேஸ்வரன் தம்பதியரின் ஏக புத்திரி திருநிறைச் செல்வி **வித்தியா** அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு வண்ணை ஸ்ரீ காமாஷி அம்பாள் தேவஸ்தான கல்யாண மண்டபத்தில் திருமணம் நிறைவேற பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தங்களை குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்புபசாரம்: மணமகன் இல்லத்தில் 28 ஆம் திகதி பி.ப. 3 மணி
மணமகள் இல்லத்தில் 30ஆம் திகதி பி.ப.3 மணி.

இந்த அழைப்பினை இருவீட்டாரின் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளும் வண்ணம் வேண்டுகிறோம்

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

திரு.திருமதி கிருஷ்ணசாமி பத்மநாதன் (குடும்பம்)
1203, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

திரு.திருமதி இரத்தினம் மகேஸ்வரன் (குடும்பம்)
45/4, பூநாறி லேன்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

(83825)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கடந்த 27.08.2008 அன்று பருத்தித்துறை மாவட்ட மேலதிக நீதிவான் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக (J.P) சத்தியப்பிரமாணம் செய்த எமது பிரதேச பிரதிநிதி

**கார்த்திகேசன் செந்தில்நாதன்**

அவர்கள் மேலும் பல பதவிகளைப் பெற வாழ்த்துகின்றோம்.

ஜனசக்திக் காப்புறுதி PLC. நெல்லியடிக் கிளை.
முகாமையாளர், பணியாளர்கள்.

தென்மராட்சி கிழக்கு

### பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து) கொடிகாமம்

மினி கோப்சிற்றி

கட்டடத் திருத்தம், வர்ணம் பூசுவதற்கான

### கேள்வி கோரல்

சங்கத்தின் பின்வரும் கிளைகளின் கட்டடங்கள் திருத்துவதற்கும் வர்ணம் பூசுவதற்கும் தகுதி வாய்ந்தவர்களிடம் இருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

01. மந்துவில் மத்தி கிளை இல.05
02. அல்லாரை கிளை இல. 04
03. இடைக்குறிச்சி கிளை இல. 09

மேற்படி கட்டடத் திருத்தம் வர்ணம் பூசுதல் ஆகிய வேலை விவர அட்டவணையை சங்கத்தில் நேரில் பெற்று 31.03.2009 ஆம் திகதிக்கு முன்னர் கேள்விகளை கடித மூலமோ அல்லது நேரிலோ சங்கத்தில் சமர்ப்பிக்கவும்.

பொது முகாமையாளர்;
தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம், கொடிகாமம்.

## மரண அறிவித்தல்

### குமாரசாமி செல்வநாயகம் (கந்தாமி)

மண்டைதீவு, 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி செல்வநாயகம் 22.03.2009 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - தில்லைவனம் தம்பதியினரின் அன்பு மகனும் தியாகராசா - காலஞ்சென்ற சின்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் சந்தானலட்சுமியின் அன்புக் கணவரும் தவநாயகம் (சுவிஸ்), வசந்தகோகிலம் (இந்தியா), ஸ்ரீஸ்கந்தராசா (பிரான்ஸ்), காலஞ்சென்ற மேனகா (மதி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சச்சிதானந்தம், இராஜேஸ்வரன், வர்ணலிங்கம், வர்ணலட்சுமி, ஜெயமாலினி ஆகியோரின் மைத்துனரும் சந்திரலதா (சுவிஸ்), சந்திரகலா (கௌரி), காலஞ்சென்ற தவநேசன், கபாலி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் புவனேஸ்வரன் (சுவிஸ்), கமலதாஸ் ஆகியோரின் மாமனாரும் பிரவீனா, நிதர்சனா (சுவிஸ்), கானகன், நிதுசிகா, டிலக்சிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (25.03.2009) புதன்கிழமை மாலை 4மணியளவில் வவுனியாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மைத்துனர்கள்.

தாவடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டன் நாடாளுமன்றத்தில் இலங்கை குறித்து விவாதம்

கொழும்பு, மார்ச் 26

பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை இலங்கை நிலைவரம் குறித்து ஒன்றரை மணி நேரம் கடுமையான விவாதம் இடம்பெற்றுள்ளது.

ஐக்கிய நாடுகள் இலங்கை விவகாரத்தில் உடனடியாக தலையிட வேண்டும். பொதுநலவாயத்திலிருந்து இலங்கையை இடைநிறுத்தவேண்டும் என்ற கோரிக்கைகளை பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சி பேதங்களை மறந்து ஒருமித்த குரலில் முன்வைத்துள்ளனர்.

இலங்கையில் யுத்தத்தை நிறுத்துவதற்காக செயற்படுமாறு இந்தியாவிற்கு அழுத்தம் கொடுக்குமாறு அவர்கள் கோரியுள்ளனர்.

விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய தொழிற்கட்சி உறுப்பினர் சியோபைன் மக்கொனாக், மோதல் காரணமாக வெளியேறிய மக்கள் வவுனியாவில் முகாம்களில் அடைக்கப்படுகின்றனர் எனத் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் விமான தாக்குதலிலிருந்து தப்புவதற்காக பதுங்கு குழிகளை அமைப்பதை நாடாளுமன்ற உறுப்பினர் எட்வேர்ட் டேவி சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை அரசு செயற்படும் விதத்தைப் பார்க்கும்போது, அங்கு இனப் படுகொலை நடைபெறுவதாகத் தெரிகின்றது. பாது காப்பு வலயங்களில் விமானத் தாக்குதல்கள் இடம்பெறுகின்றன என சுயேச்சை உறுப்பினர் அன்ட்றூ பெலிங் தெரிவித் துள்ளார்.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்படும் தீர்மானங்கள் தோல்வியடைந்தால், அது அந்த நாட்டிற்கு சாதகமாக மாறும் என தெரிவிக்கப்படுவதை லிபரல் ஜனநாயக கட்சியின் உறுப்பினர் எட்வேர்ட் டேவி நிராகரித்துள்ளார்.

''பிரிட்டன் இவ்வாறான தீர்மானமொன்றை கொண்டுவந்து அதற்கு ஆதரவாக வாக்களிக்கவேண்டும். ரஷ்யா, சீனாவிற்கும் அழுத்தம் கொடுக்கவேண்டும். அவர்கள் அதனை எதிர்த்தால் அவர்கள் யார் என்பதை அம்பலப்படுத்தவேண்டும்'' - என்றார் அவர்.

# மக்கள் செறிந்து வாழும் பகுதிகளிலேயே ஷெல்கள் அதிகமாக வீழ்ந்து வெடிக்கின்றன

## ஐ.நா. பேச்சாளர் தகவல்

வன்னியில் பாதுகாப்பு வலயங்களில் நிரம்பி வழியும் மக்கள் மத்தியில் ஷெல்கள் வீழ்ந்து வெடிக்கின்றன என ஐக்கிய நாடுகளின் கொழும்பு அலுவலகப் பேச்சாளர் கோர்டென் வெய்ஸ் செய்திச் சேவையொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

வன்னியில் இடம்பெறும் கடும் மோதலிலிருந்து தப்பியோடும் மக்கள் 14 கிலோ மீற்றர் பாதுகாப்பு வலயத்திற்குள் வந்து குவிகின்றனர்.

கடந்த ஆறு வார காலமாகப் பெருமளவு பொதுமக்கள் அங்கு மிகவும் நெருக்கமான சூழலில் வாழ்கின்றனர்.

அங்கு நிலைமை மிகவும் மோசமானதாகவுள்ளது. மிகவும் குறைந்தளவு உணவு, மருத்துவ உதவி, சுத்தமான நீர் போன்றவற்றுக்கு மத்தியில் மக்கள் நிரம்பி வழியும் தங்குமிடங்களில் ஷெல்கள் வீழ்ந்து வெடிக்கின்றன - என்று அவர் குறிப்பிட்டார்.

# சிகிரியா மலைக்குன்றில் குளவி கொட்டி 20 பேர் காயம்!

கொழும்பு, மார்ச் 26

சிகிரியா குன்றைப் பார்வையிடச் சென்றவர்களைக் குளவிகள் கொட்டியதில் 20 பேர் காயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது. இதில் காயமடைந்தவர்கள் சிகிரியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

அந்த மலைப்பகுதியில் சிக்குண்டிருந்த மேலும் 40 பேரை பொலிஸார் மீட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. இச் சம்பவத்தில் இரு வெளிநாட்டவர்களும், மாணவர்களுமே அதிகளவில் காயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். அந்தப் பகுதியை நோக்கிவரும் மக்களைத் தடுத்து நிறுத்தும் நோக்கில் விமானப் படையினரும் பொலிஸாரும் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ-சி)

# சேருவிலப் பகுதி வலயங்களில் நள்ளிரவு வேளையில் விவசாயிகள் ஐவர் சுட்டுக்கொல்லப்பட்டனர்

## புலிகள் மீது பாதுகாப்புத் தரப்பு குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 26

திருகோணமலை மாவட்ட சேருதுவர, தெகிவத்த கிராமப்பகுதியில் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் சிங்கள விவசாயிகள் ஐவர் உயிரிழந்தனர். மேலும் இருவர் படுகாயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்த இருவரும் கந்தளாய் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக குருநாகல் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

கொலையுண்டவர்கள், தமது வயல்களில் விலங்குகளிடம் இருந்து பயிர்ச் சேதத்தைத் தடுப்பதற்காக அங்கு இரவு நேரத்தில் தங்கியிருந்தனர் என்றும் அவ்வேளை அங்கு சென்ற விடுதலைப்புலிகளின் ஆயுதக்குழு ஒன்றே இந்தத் தாக்குதலை நடத்திவிட்டுச் சென்றுள்ளது என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதயநாணயக்கார தகவல் வெளியிட்டார்.

இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஐவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். ஏனைய இருவரும் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தை அடுத்து, அப்பகுதியில் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து தேடுதல்களை நடத்தினர் என்று தெரிவிக்கப்படுகிறது. (அ-சி)

# மன்னாரில் இளைஞர் சூட்டுக்குப் பலி

கொழும்பு, மார்ச், 26

மன்னார் காட்டுப் பள்ளிவாசல் பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் மாலை 6.50 மணியளவில் இனந்தெரியாத ஆயுததாரிகளால் இளைஞர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

உயிரிழந்த இளைஞர் மன்னார் காட்டுப்பள்ளிவாசல் பகுதியைச் சேர்ந்த செல்வராசா கிங்சிலி (வயது 29) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞர் தனது வேலையை முடித்துவிட்டு மன்னார் மூர் வீதியின் பிரதான வீதியூடாக தமது வீட்டுக்குச் சென்ற சமயமே இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்.

அருகில் உள்ள இராணுவக் காவலரணுள் இருந்த இராணுவத்தினருக்கு, மக்கள் தகவல் வழங்கியதை அடுத்து, அவர்கள் காயமடைந்த நிலையில் காணப்பட்ட அந்த இளைஞரை மன்னார் வைத்தியசாலையில் சேர்த்தனர். எனினும் அவர் அங்கு சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். அவரது தலை, வயிறு மற்றும் கை கால் பகுதிகளிலே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன. (அ-சி)

# புதுக்குடியிருப்பில் இரு ஹெலிகள் புலிகளின் தாக்குதலில் அருந்தப்பு

கொழும்பு, மார்ச் 26

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு வான்பரப்பில் பறந்துகொண்டிருந்த இரு ஹெலிக்கொப்டர்கள் மீது நேற்று முற்பகல் 11 மணியளவில் விடுதலைப் புலிகள் ஏவுகணைத் தாக்குதலை நடத்தினர் எனப் படைத்தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. எனினும் அந்த இரண்டு ஹெலிக்கொப்டர்களும் மயிரிழையில் தப்பிவிட்டன எனவும் படைத்தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பில் இடம்பெற்றுவரும் சமரில் காயமடையும் இராணுவத்தினரை ஏற்றிச்செல்லும் பணியில் ஈடுபட்ட ஹெலிக்கொப்டர்கள் மீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் கூறப்பட்டது. மக்கள் பாதுகாப்பு வலயத்தில் இருந்தே விடுதலைப் புலிகள் இந்த ஏவுகணைத் தாக்குதலை நடத்தினர் எனபடைத்தரப்பு தெரிவித்தது.

எனினும், இந்த இரண்டு ஹெலிக் கொப்டர்களும் காயமடைந்த இராணுவத்தினரை ஏற்றிக்கொண்டு உரிய இடத்திற்கு வந்து சேர்ந்துவிட்டன எனவும் படைத்தரப்புத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(அ-சி)

# 'சுடர் ஒளி' ஆசிரியரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளைவானில் வந்தவர்களால் கடத்தப்பட்டமை -, அதன் பின்னர் கைது செய்யப்பட்டமை என்பன தொடர்பாக அந்த உரிமை மீறல் மனுவில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

பத்திரிகை ஆசிரியர் ஒருவரை இவ்வாறு கைது செய்து தடுப்புக்காவலில் வைத்திருக்கின்றமை, அவருக்கு இம்சை ஏற்படுத்துகின்றமை, சுதந்திரமாகத் தொழிலில் ஈடுபட முடியாமல் அவர் தடுக்கப்பட்டிருக்கின்றமை என்பவற்றின் மூலம் அவரது அடிப்படை உரிமை மீறப்பட்டிருப்பதாக அந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது. எனவே, 'சுடர்ஒளி' ஆசிரியரை சட்டவைத்திய அதிகாரியிடம் முன்னிறுத்தவும் நீதிமன்றத்தில் நீதிவான் முன் ஆஜர் செய்து விடுவிக்கவும் உத்தர விடுமாறு அந்த மனுவில் கேட்கப்பட்டிருக்கிறது.

இந்த மனுவில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, கொழும்பு குற்றவியல் பிரிவின் பணிப்பாளர், சப் இன்ஸ்பெக்ரர் ஏ.ஜி.டி.பி. விஜேரத்ன, பொலிஸ் மா அதிபர் ஜயந்த விக்கிரமரத்ன, பொலிஸ் பேச்சாளர் ரஞ்சித் குணசேகர, சட்டமா அதிபர் என்.சில்வா ஆகியோர் எதிர்மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றனர். (அ-சி)

# ஜனாதிபதியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டடத்தில் கூடி ஆராய்ந்தனர்.

கூட்டத்தில் பல்வேறு விடயங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்ட போதிலும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. இன்று காலை மீண்டும் கூடி இறுதி முடிவு எடுப்போம் என்று மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

இதேவேளை-

ஜனாதிபதியை சந்தித்தாலும் சரி சந்திக்காவிட்டாலும் சரி வன்னிப் பகுதியின் இன்றைய நிலைவரம், கூட்டமைப்பின் நிலைப்பாடு ஆகியன தொடர்பான அறிக்கை ஒன்று ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவிருக்கிறது என்றும் -

அந்த அறிக்கையைத் தயாரிப்பது தொடர்பான கலந்தாலோசனை நேற்றிரவும் தொடர்ந்தது என்றும் கூட்டமைப்பின் வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-1)

# பாதுகாப்புச் சபையில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதிலளிக்கையில், அந்த நாட்டின் பொதுநலவாய மற்றும் வெளிவிவகார அமைச்சர் பில ரம்பெல இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சர் இலங்கை நிலைவரம் குறித்து ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையுடனும் பொதுநலவாயத்தில் உள்ள எமது சகாக்களுடனும் தொடர்ந்தும் பேச்சுகளை மேற்கொண்டு வருகிறார்.

எமது வெளிவிவகார அமைச்சர் இந்தச் சபையில் பல தடவைகள் குறிப்பிட்டமை போன்று இலங்கையின் வட பகுதியில் மோதலில் சிக்கியுள்ள மக்களின் பாதுகாப்பே எமது முன்னுரிமையாகவுள்ளது.

இந்த நிலைமைக்கு முடிவு காண்பதற்கு இலங்கை அரசுடனும், சர்வதேச சகாக்களுடனும் தொடர்ந்தும் இலங்கை நிலைவரம் குறித்து பாதுகாப்புச் சபையில் முழுமையான விளக்கவுரையொன்று நிகழ்த்தப்படுவதை உறுதி செய்வதற்காக நாங்கள் தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் இலங்கை விவகாரம் தொடர்பாக ஜோன் ஹோம்ஸ் உரையாற்றியதை நாங்கள் வரவேற்கிறோம்.

பாதுகாப்புச் சபையில் உள்ள எமது சகாக்களுடன் தொடர்ச்சியாக இலங்கை நிலைவரம் குறித்து விவாதித்து வருகிறோம். அவர்களுடன் இணைந்து நிலைமையை உன்னிப்பாக அவதானித்து வருகிறோம்.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதல் முக்கியமான கட்டத்தை அடைந்துள்ளது.

பிரிட்டிஷ் அரசு இலங்கையின் மனிதாபிமான நிலைகுறித்து ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. குறிப்பாக மோதலில் சிக்கியுள்ள ஆயிரக்கணக்கான மக்களின் நிலைபற்றிக் கவலையடைந்துள்ளது.

கடந்த ஜனவரியிலிருந்து இலங்கை இராணுவம் கண்டுள்ள முன்னேற்றம் காரணமாக இராணுவத்தினரும் விடுதலைப் புலிகளும் மாத்திரமல்ல அப்பாவிப் பொதுமக்களும் அதிர்ச்சியளிக்கும் வகையில் கொல்லப்பட்டுள்ளனர்.

அந்தப் பகுதியில் சுதந்திரமாக செய்தி வெளியிட இயலாமையால் உறுதியான புள்ளி விவரங்களைப் பெறமுடியாதுள்ளது. எனினும், ஐக்கிய நாடுகள் சபை 2ஆயிரத்து 600 பேர் கொல்லப்பட்டும், 7 ஆயிரத்து 200 பேர் காயமடைந்துமுள்ளனர் எனவும் மதிப்பிட்டுள்ளது. இந்தப் புள்ளிவிவரங்கள் அச்சமடைய வைக்கின்றன.

காஸாவில் நிகழ்ந்ததை எவரும் நியாயப்படுத்த முடியாது. அதேவேளை, இந்த விடயத்தில் புள்ளிவிவரங்கள் மிகவும் முக்கியமானவை.

சர்வதேச ஊடகங்கள் இதற்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை. ஒவ்வொரு நாளும் பொதுமக்களின் [illegible] அதிகரிக்கின்றன- என்றார். (அ-சி)

# தமிழருக்கு அதிகாரச்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக அவர் எழுதியுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிட்டிருப்பவை வருமாறு:-

இலங்கையில் நடைபெற்றுவரும் நிகழ்வுகள் குறித்து நீங்கள் கடந்த மாதம் 22 ஆம் திகதி எழுதிய கடிதம் என்னை மிகவும் பாதித்தது. இலங்கையில் நடந்துவரும் சண்டையில் ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழர்கள் துரதிஷ்டவசமாகத் தங்கள் உயிர்களை இழந்து வருகின்றமை வேதனையை அளிப்பதாகவும் - மேலும், சண்டைப்பகுதிக்கு வெளியில் தற்காலிக முகாம்களில் தங்கியிருக்கும் ஆயிரக்கணக்கான மக்களின் நிலைமை குறித்தும் தாங்கள் குறிப்பிட்டிருந்தீர்கள்.

இது தொடர்பாக இலங்கை அதிகாரிகளுடன் பல்வேறு மட்டத்தில் தொடர்ந்து பேசி வருகிறோம். நமது வெளியுறவுச் செயலர் அண்மையில் கொழும்பு சென்று அந்நாட்டு வெளியுறவுச் செயலர், பாதுகாப்புச் செயலர், இலங்கை அதிபரின் செயலர் ஆகியோரை சந்தித்துப் பேசினார். இலங்கை அதிபரையும் அவர் சந்தித்தார். அப்போது தமிழர்கள் படும் அவதி குறித்த நமது கவலையை அவர் தெளிவாக விளக்கினார்.

போர் நிறுத்தம் செய்வதற்கு வலியுறுத்தி வருகின்றோம்

மேலும் தமிழர்களின் பாதுகாப்பு, மருத்துவ வசதிக்காக கள மருத்துவமனை அமைப்பது உள்ளிட்ட யோசனைகளை [illegible] தெரிவித்துள்ளார். இதனை இலங்கை அரசு ஏற்றுக்கொண்டது. அதன்படி சண்டைப்பகுதியிலிருந்து வெளியேறும் மக்களுக்காக கள மருத்துவமனை ஒன்றும் அமைக்கப்பட்டு அது சிறப்பாகச் செயற்பட்டு வருகிறது.

இலங்கை அரசுடன் மத்திய அரசு நடத்திய பேச்சுகளில் அப்பாவித் தமிழ் மக்கள் போர் நடக்கும் பகுதியிலிருந்து வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தங்குவதற்கு வசதியாக தற்காலிக போர் நிறுத்தம் செய்யவேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

பாதுகாப்பு வலயப் பகுதிகளில் மறுவாழ்வுப் பணிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. நமது வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி இது தொடர்பாக கடந்த மாதம் 28 ஆம் திகதி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

மேலும் இதற்கான நடவடிக்கைகளை அவர் துவங்கியிருக்கிறார் எனவும் கூறியிருக்கிறார். என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதை நாம் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். தாங்கள் பூரண நலமடைந்து வருகிறீர்கள் என்று நம்புகிறேன். உங்களது சேவைகள் இந்தியாவுக்கும் தமிழ்நாட்டுக்கும் மேலும் பல ஆண்டுகளுக்கு நீடிக்க வேண்டும். என்னைப் பொறுத்தவரை அண்மையில் நடந்த அறுவைச் சிகிச்சைக்குப் பின்பு நான் எனது பணிகளைத் தொடங்கியிருக்கிறேன். - இவ்வாறு அவர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது; வெற்றி அனுபவிக்கும் காலம் தொலைவில் இல்லை

## இராணுவத் தளபதி சொல்கிறார்



கொழும்பு, மார்ச் 26

வடக்கில் மேற்கொண்டு வரும் மனிதாபிமான போர் நடவடிக்கை தற்போது இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. இந்தப் போரின் வெற்றியை அனுபவிக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை.

விடுதலைப்புலிகளின் கனரக ஆயுதத் தாக்குதல்களில் படையை சேர்ந்த பெரும் பாலானோருக்கு காயங்கள் ஏற்படுகின்றன.

இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா மேற்கண்டவாறு கூறினார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவற்றைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வன்னியில் மிகக் குறுகிய நிலப்பரப்புக்குள் சிக்குண்டுள்ள விடுதலைப் புலிகள் இராணுவத்தினர் இருக்கும் பகுதிகளுக்குள் ஊடுருவி தாக்குதல்கள் நடத்த முயற்சித்து வருகின்றனர்.

இராணுவத்தினர் தமது உயிர்களை தியாகம் செய்து வடக்கில் மேற்கொண்டு வரும் மனிதாபிமான போர் நடவடிக்கைகள் தற்போது இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளன. இந்நிலையில் இப் போரின் வெற்றியை அனுபவிக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை. வடக்கில் படையினர் பல்வேறு பிரச்சினைகளுக்கு ,முகம் கொடுத்தே இந்த வெற்றியை அண்மித்துள்ளனர். தவிர இது தானாக வந்த வெற்றியல்ல.

**புலிகள் ஊடுருவித் தாக்குகின்றனர்**

மோதல்களில் ஈடுபட்டு வரும் விடுதலைப்புலிகளுக்கு எவ்வகையிலோ ஆயுதங்கள் கிடைத்துள்ளன. படையினருக்கு ஏற்பட்டுள்ள காயங்களில் பெரும்பாலானவை புலிகளால் நடத்தப்படும் கனரக ஆயுதங்களால் ஏற்படுத்தப்பட்டவையாகும். அவர்கள் எவ்வித ஆயுதங்களால் தாக்கதல்களை நடத்தினாலும் படையினரின் பயணம் நிறுத்தப்படுவதில்லை.

எமது இராணுவத்தினர் உண்ணாமல், உறங்காமல் போரின் வெற்றிக்காக தம்மை ஈடுபடுத்தி வருகின்றனர். அதனை வார்த்தைகளால் கூறி விட முடியாது. அவர் கள் பலத்துடனேயே இந்த வெற்றியை நோக்கி பயணித்துள்ளனர். வன்னியில் தற்போது எஞ்சியுள்ள விடுதலைப்புலி உறுப்பினர்கள் இராணுவத்தினர் இருக்கும் பகுதிகளுக்குள் ஊடுருவி பலத்த தாக்கு தல்களை நடத்தவே முயற்சித்து வருகின்றனர் - என்றார். (அ-சி)

# கடன் வழங்குவதாயின் கடும் நிபந்தனைகளை விதிக்க நாணய நிதியத்திடம் ஐ.தே.க. வற்புறுத்து

சர்வதேச நாணய நிதியம் இலங்கை அரசுக்கு நிதி வழங்குவதாகவிருந்தால் கடுமையான நிபந்தனைகளை விதிக்கவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி சர்வதேச நாணய நிதியத்திடம் வலியுறுத்தியிருக்கிறது.

மிஹின் லங்கா விமானத்தை மூடுதல், அமைச்சர்களுக்கான வீட்டு வாடகையை முற்றாக வெட்டுதல், அமைச்சர்களின் எண்ணிக்கையை 25 ஆகக் குறைத்தல், நல்லாட்சி ஒன்றுக்கான உறுதிமொழி யைப் பெறுதல் போன்றவற்றை நாணய நிதியம் நிபந்தனைகளாக முன்வைக்க வேண்டும் என்றும் அக்கட்சி மேலும் கூறியுள்ளது.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற 7 நிதிச்சட்டமூலங்கள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐ.தே.கட்சி எம்.பி. கபீர் ஹாசிமே இவ்வாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஏழை மக்களிடமிருந்து வரிப்பணத்தைச் சுரண்டி அதைப் பணக்காரர்களுக்குக் கொடுக்கும் நோக்கில்தான் அரசு இந்தச் சட்டமூலங்களைக் கொண்டு வந்திருக்கின்றது.

இந்த அமைச்சர்கள் அனைவரும் ஒன்றிணைந்து பொருளாதாரத்தை அழித்து விட்டனர். நல்ல வேளை யுத்தத்தை எமது இராணுவத்தினர் செய்கின்றனர். தப்பித்தவறி அமைச்சர்கள் அதைச் செய்திருந்தால் பொருளாதாரம் போல் யுத்தமும் தோல்வியடைந்திருக்கும்.

இந்தப் பொருளாதாரத்தில் தோல்வியுற்றிருக்கும் அரசு இப்போது சர்வதேச நாணய நிதியத்திடம் 19 ஆயிரம் கோடி ரூபாவைக் கடனாகக் கேட்டுள்ளது. இந்த நிறுவனத்திடம் இவ்வளவு பெரிய தொகையை கடனாகக் கேட்டிருப்பது வரலாற்றில் இதுதான் முதல் தடவையாகும்.

இந்தக் கடனை நாணய நிதியம் வழங்குவதாக இருந்தால் இலங்கைக்குக் கடுமையான நிபந்தனைகளை விதிக்க வேண்டும். இந்தக் கோரிக்கையை நாம் நாணய நிதியத்திடம் முன்வைக்கின்றோம் - என்றார்.

## தற்காலிகத் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐந்து ஆயர்கள் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்ட கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஆயர்கள் தமது அறிக்கையில் வலியுறுத்தியுள்ள நான்கு கோரிக்கைகள் வருமாறு:-

* உலக உணவுத் திட்ட அமைப்பின் உணவு விநியோகம் தொடர அனுமதிக்க வேண்டும்.
* காயமடைந்தவர்கள் சிகிச்சைக்கு செல்ல வசதியாக கப்பல் சேவையை தொடர்ந்து நடத்த வேண்டும்.
* பாதுகாப்பு வலயத்தில் இருந்து வெளியேற விரும்புபவர்கள் வெளியேற வசதியாக தற்காலிக மோதல் தவிர்ப்பு செய்யவேண்டும்.
* அந்த தாக்குதல் நிறுத்த காலத்தில் ஐ.நா., செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு மற்றும் தகுதியான நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் மதகுருமார்களும் மோதல் இடம்பெறும் பகுதிக்கு செல்வதற்கு அனுமதிக்க வேண்டும்.

அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம் (யாழ்ப்பாணம்), அதிவண. ராயப்பு யோசப் (மன்னார்), அதிவண. நேபேட் அன்றாடி (அனுராதபுரம்) ஆகிய கத்தோலிக்க ஆயர்களும் -

அதிவண. குமார இலங்கசிங்க (குருநாகல்), அதிவண. டுலிப் டி சிக்கேரா கொழும்பு ஆகிய அங்கிலிக்கன் ஆயர்களும் அந்த அறிக்கையில் கையொப்பமிட்டுள்ளனர். (1)

## உதயன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்தியட்சகர் லலித் பிரேமரத்தின தலைமையிலான குழு ஒன்றும் விசாரணைகளை மேற்கொண்டது. சம்பவ இடத்தை அக்குழுவினர் படம் எடுத்துச் சென்றனர்.

யாழ். சிவில் நிர்வாக அதிகாரி மேஜர் நிசங்க தலைமையிலான இராணுவத்தினர் குழுவும் சம்பவ இடத்தில் நேற்று விசாரணை மேற்கொண்டது.

அதேவேளை -

இந்தத் தாக்குதலைபிரான்ஸை தலைமையகமாக் கொண்ட எல்லைகளற்ற பத்திரிகையாளர் அமைப்பு வன்மையாகக் கண்டித்துள்ளது.

'உதயன்' ஆசிரியர் என். வித்தியாதரன் கைது செய்யப்பட்டு ஒரு மாதம் முடிவதற்கு முன்னர், பத்திரிகை விநியோகத்தை நிறுத்துவதற்கான மற்றொரு முயற்சியாகவே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது என்று அந்த அமைப்புத் தெரிவித்துள்ளது.

'உதயன்', 'சுடர் ஒளி' ஊழியர்களுக்கு எதிரான வன்செயல்கள் மற்றும் அச்சுறுத்தல்களை எக் காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் மேலும் அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடத்திய சம்பவத்துக்கு பொறுப்பானவர்களை கைது செய்யும் நோக்குடன் விசாரணைகளை முன்னெடுத்து சம்பந்தப்பட்டவர்களை நீதிக்கு முன் நிறுத்த வேண்டும் என்று இலங்கை அரசாங்கத்தைக் கோருகிறோம் - என்று எல்லையற்ற செய்தியாளர் அமைப்பின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-1)

## 2 நாள்களாகக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

**இரு தரப்பிலும் அதிக இழப்பு**

முல்லைத்தீவு களமுனைகளில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரச படைகளுக்கும் இடையில் கடுஞ்சமர் தொடர்கின்றது - என்று தேசிய பாதுகாப்பிற்கான ஊடக மத்திய நிலையம் நேற்று செய்தி வெளியிட்டது.

இச்சமரில் இரு தரப்புகளுக்கும் இழப்புகள் ஏற்பட்டன என ஊடக மத்திய நிலையம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

இரணைப்பாலைக்கு வடக்கே 58 ஆவது டிவிஷன், சிங்க றெஜிமன்ட் - 7, கஜபாகு றெஜிமன்ட் - 20 ஆகிய படையணிகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று அதிகாலை முதல் தொடர்ச்சியாக கடும் சண்டை இடம்பெற்று வருகிறது.

இச்சமரில் விடுதலைப்புலிகளில் பலர் உயிரிழந்தனர் என்றும் பலர் காயமடைந்தனர் என்றும் ஊடக மத்திய நிலையம் தெரிவித்த

**12 மணிநேரமாகக் கடும் சண்டை**

புதுக்குடியிருப்புப் பகுதியில் 58 ஆவது படைப் பிரிவுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் நேற்றுமுன்தினம் பன்னிரண்டு மணி நேரம் சண்டை நடைபெற்றது என தேசிய பாதுகாப்பிற்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது.

இச்சமரில் படைத் தரப்புக்கு இழப்புகள் ஏற்பட்ட அதேவேளை, விடுதலைப் புலிகளின் மூன்று சடலங்களையும், வெடிப்பொருள்களையும் மீட்டனர் என்று அந்த ஊடக மத்திய நிலையம் விடுத்த செய்தியில் கூறப்பட்டுள்ளது.

மேலும் இரணைப்பாலைக்கு வடக்கே நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை 58 ஆவது படைப்பிரிவுக்கும் விடுதலைப்புலிகளுக்கு மிடையில் கடுஞ் சமர் இடம்பெற்றுள்ளது.

விடுதலைப் புலிகள் தொடர்ச்சியாக ஆட்டிலறி மற்றும் மோட்டார்த் தாக்குதல்களை மேற்கொண்டனர் என்றும் தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தொடர்கிறது.

இதேவேளை, 53 ஆவது படைப் பிரிவும், விசேடப் படையணி - 8 இணைந்து நேற்று முன்தினம் புதுக்குடியிருப்புக்கு கிழக்கே மேற்கொண்ட சமரில் ஏ-35 பிரதான வீதியில் அமைந்துள்ள மண்ணணை ஒன்றை கைப்பற்றியுள்ளனர் என படைத்தரப்புச் செய்தி தெரிவிக்கின்றது.

அதேவேளை, பற்றிக்காரப்பகுதியில் 57 ஆவது படைப் பிரிவைச் சேர்ந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் நிலக்கண்ணி வெடியில் சிக்கி காயமடைந்தார் என்றும் மத்திய நிலையம் விடுத்த செய்தியில் கூறப்பட்டுள்ளது.

எனினும், இச்சமர்களில் இரு தரப்புகளுக்கும் ஏற்பட்ட உயிரிழப்புகளின் எண்ணிக்கை குறித்த விவரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. (அ-சி)

## சம்மாந்துறையில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளனர். குறித்த சடலம் நேற்றுக்காலை 8 மணியளவில் மீட்கப்பட்டுள்ளது என சம்மாந்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்கு வந்த கல்முனை பதில் மஜிஸ்திரேட் நீதிமன்ற நீதிவான் எம்.எம்.அப்துல்லா பிரதேச பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டுள்ளார். சடலம் தற்போது கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது என சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்தனர். (அ-சி)

## பாதுகாப்பு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகளவிலான தாக்குதல்கள் வலைஞர் மடம், அம்பலவன்பொக்கணை மற்றும் மாத்தளன் பகுதிகளில் படையினரால் நடத்தப்பட்டுள்ளன. இதேவேளையில் முள்ளிவாய்க்கால் பகுதியில் ஷெல் மற்றும் விமானத் தாக்குதல்களும் நடத்தப்பட்டன.

இப்பகுதியில் ஐந்து தடவைகள் விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இந்தத் தாக்குதல்களில் இதுவரை கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி 25 சிறுவர்கள் உட்பட 112 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 47 சிறுவர்கள் உட்பட 210 பேர் காயமடைந்துள்ளனர்.

கொல்லப்பட்டவர்களில் இருவர் முல்லைத்தீவு அரசாங்க அதிபர் செயலகத்தின் பணியாளர்கள்.

முல்லைத்தீவு அரச செயலக பதிவாளரும் அலுவலகப் பணியாளருமான 52 வயதுடைய மரியநாயகம் டெய்சி ராணி மற்றும் மாவட்ட செயலக உலக உண[illegible] திட்ட நிவாரண வழங்கல் பதிவாளர[illegible] 27 வயதுடைய பரமேஸ்வரன் ஜெனோஜா ஆகியோரே படுகொலை செய்யப்பட்டவர்கள் ஆவர்.

கொல்லப்பட்ட ஏனையோரின் பெயர் விவரம் வருமாறு:-

கந்தையா சுப்பையா (வயது 60), செல்லத்துரை (வயது 77), தினகரன் யாழியன் (வயது ஐந்தரை மாதம்) , பெருமாள் ரவிக்குமார் (வயது 28), ரவீந்திரன் பிரியா (வயது 08), தம்பையா (வயது 74), பொன்னம்பலம் சிறீலக்சுமி ரஞ்சன் (வயது 52), மாதவன் செல்லப்பா (வயது 65), தியாகராசா நிசாந்தன் (வயது 19), ராமகிருஸ்ணன் மேரி ஜெயசாந்தினி (வயது 09), தம்பு மயில்வாகனம் (வயது 82), பசுபதி சுதாகரன் (வயது 23), தம்பு சுப்பிரமணியம் (வயது 74), சந்தனம் காளியரத்னம் (வயது 59), நவரட்ணம் நேசமலர் (வயது 52), கந்தையா சுப்பையா (வயது 74), விக்கி கண்ணம்மா (வயது 42), செல்வராசா ராசம்மா (வயது [illegible]) தவக்குமார் டிந்து (வயது 09), மார்க்கண்டு சசிகரன் (வயது 23), சத்தியமூர்த்தி கௌரியம்பாள் (வயது 45),

சாரங்கன் தட்சாயினி (வயது 12), வெள்ளைச்சாமி விதுசா (வயது 07), நகுல்ராஜ் கிருஸ்ணரஜனி (வயது 35), பரமேஸ்வரன் ஜெயரஞ்சனி (வயது 52), அமிர்தலிங்கம் டிலக்சன் (வயது 10), இராசேந்திரம் பிரதீபன் (வயது 29), மதனவசீகரன் பிரவீணா (வயது 03), ஆறுமுகம் கலைவாணன் (வயது 13), மருதமலை தமிழினியன் ( வயது 05), முருகாண்டி நிதியிம்பன் (வயது 06), காளிதாசன் காவியன் (வயது 07), மருதன் (வயது 08), தேவசகாயம் கார்நிலா (வயது 10), மலையாண்டி குபேரன் (வயது 14),

கிருபைராசா குமாரி (வயது 33), தேவதாஸ் கார்த்திகாயினி (வயது 15), ஏழுமலை கிருநாந்தி (வயது 13), பார்த்திபராஜா பார்கவி (வயது 14), தேவிதாசன் காவியா (வயது 13) , கதிரித்தம்பி இந்திரலிங்கம் (வயது 31), சர்வானந்தகரன் நிசாந்தினி (வயது 24), சே.ருக்குமணி (வயது 52), மா.சசிகுமார் (வயது 23), சு.பாலசிங்கம் (வயது 56), ந.சோனியா (வயது 18) ,

ஏனையோரின் பெயர் விவரம் கிடைக்கப்பெறவில்லை- என்று இணைத்தளம் ஒன்று குறிப்பிட்டுள்ளது. (அ-சி)


இதோ உங்களுக்காக...!

MOTHER BOARD: MSI - 5,400/=; Foxconn G31 - 5,500/=; Biostar G31 - 5,750/=; Longtron 478 - 6,250/=

LCD MONITOR: 17" Squre LCD Monitor - 15,500/=; 17" Wide LCD Monitor - 15,900/=; 19" Wide LCD Monitor - 17,750/=

VGA CARD: Agp 128MB Nvidia - 4,500/=; 512MB Pci Express - 7,500/= (Asus/Geforce); Geforce 1GB - 12,250/=

DVD WRITER: LG Sata & Ide - 3,000/=; CD Writer - 2,750/=

HARD DISK: 80GB Sata - 4,700/=; 160GB Sata - 5,100/=

PEN DRIVE: 1GB - 600/=; 2GB - 850/=; 4GB - 1,100/=; 8GB - 1,900/=

PORTABLE HARDDISK: 160GB usb Power - 9,750/=; 250GB usb Power - 11,750/=; 320GB usb Power - 13,750/=

TONER: 12A - 5,200/=; 92A - 5,200/=; 49A - 5,200/=; 13A - 5,300/=

ACCESSORIES: Hp Laserjer - 13,750/=; Hp 1560 Color Printer - 4,900/=; ATX HandleCasing(500w) - 4,100/=; Pendrive Capturecard - 7,500/=; Power Supply - 1,700/=; Web Camara - 1,400/=; Card Reader - 700/=; 56K Modem - 700/=; LGA Processor Fan - 1,100/=; Optical Mouse - 500/=; Sound Card - 950/=; Tv Card - 2,900/=

SONY MP3 PENDRIVE: * 1GB * Pendrive * MP3 * Voice Recording * FM Radio * Head Phone * External Micro SD Solt 4,250/=

SD RAM: 128MB - 900/=; 256MB - 1,600/=

MP4 PLAYERS: *2GB (Expand 2 GB) *Camara *FM Radio *MP3 *Games *Voice Recording *USB Cable *Power Charger *Head Phone *Driver CD 8,500/=

MP3 PLAYER: 1GB 2,500/=; 2GB 3,000/=

SONY MP4 & MP3: *FM Radio *MP3 *Games *VoiceRecording *USB Cable *Head Phone 1GB - 4,750/=; 2GB - 5,900/=

WOOFER: Creative 2.1ch - 4,100/=; Creative 5.1ch - 8,750/=; Microlab 5.1ch - 6,900/=; PORTABLE: Microlap Mine - 4,900/=; Mine Speaker - 900/=

TRANSCEND VOICE RECORDER: *4GB *FM Radio *MP3 *Recording *Head Phone 8,900/=; *8GB *FM Radio *MP3 *Recording *Head Phone 11,900/=

MUSIC WORLD & COMPUTERS
141 B, பலாலி வீதி, தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலி. 021 222 6554
(ஞாயிறு, விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்)



Sun Micro Systems இன் நேரடி சான்றிதழ்
Sun Certified Java Programmer
பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில்
JAVA
புதிய பிரிவு ஆரம்பம் 28.03.2009 07.30AM
இவ்வருடத்தில் இப்பிரிவு மட்டுமே
கணனி துறைசார்ந்த பலரும் சர்வதேச தொழிற்சந்தைக்கேற்ப தகமைகள் பெற தவறி விடுகின்றனர். நீங்கள் உலகின் முன்னணி நிறுவனத்தின் அங்கீகாரத்தைப் பெறுங்கள்.
MCS
Supported By UNDP/JRRP
324, பலாலி வீதி யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்[illegible] யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.03.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.